ஜனவிநோதினி.

Janavinodini.

POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION IN TAMIL.

Madras:

PUBLISH 236

MADRAS SCHOOL BOOK AN ... 210

AND SOLD AT

...ion of. 288
... 79
... 167, 196
...n, the way to ... 187
Wealth–Money ... 275
Winter of Life, the ... 244
Workmen, Unreliable ... 84
Why the sea is salt ... 30

J.V. Sub... a ...ar, B.A.
Bellary.

CONTENTS.

	Pages.
Air Ocean, the	291
Allahabad Fort of	235
Beauty	48
Banyan Tree, the	53
Buckingham, His Grace the Duke of.	261
Chinese Rice-paper Plant, the	157
Courage Lack of	54, 201
Education, the Late Lord Hobart's speech on	115
Elephanta, the Caves of	27
Erskine, Story of Lord	171
Farming, Improved	224, 247
Friends and Friendship	61, 80
Gibraltar	287
Gingee Fort	150
Good company	42
Hamrans the	13
Health, Laws of:—	
Digesting the Food	164
How is the whole of the body Fed?	67
Hunger is useful as a Teacher	300
It is better to eat only when we are hungry	28
Jaws and tongue, the	125
Motion of the Stomach	194
On the Nourishing part of the Food and the formation of Blood.	279
Saliva, the	138
Teeth the,	100
What is Thirst?	218
Wholesome Food	242
Why must we keep our rooms well aired?	3
Himalayas, the	266
Home	106
India in the Olden Time	236
Industrial Status, Our	210
Labour, Co-operation and Division of.	288
Leaning Tower of Pisa, the	79
Light and Heat	10
London Street-dealers	272
Manufactures	17
Magic Flute, the:—a moral tale,	57, 87, 110
Nala and Damayanti, Select Scenes from the Drama of	294
Nankin, Porcelain Tower of	1
News,	25, 51, 78, 104, 129, 155, 182, 208, 234, 259, 286
Old Friends	158
Organism, Reproduction of	221
Pearl Diving	131
Personal Violence and Abusive Language	153
Plants, and how they spread	185
Pratap Sing,—a Rajaput hero	44
Prince of Wales's Visit to Madras the	306
Quack and the Scholar, the	215
Sanitation in Villages	127
Sanscrit Dramas, Tales from:—	
Vikramorvasi	20, 36
Secondary Morals, Our	145
Shahs of Persia, Throne of the	105
Sindh, Notes on	6
St. Mark's at Venice	209
Tact and Talent	240
Taj Mahal at Agra, the	183
Ten Princes, Tales of the	70, 96, 118, 140, 179, 203, 228, 254, 281, 302
Trade Packages	73
Tramway	93
Vanity and Contentment:—a Persian Tale	133, 167, 196
Wealth, the way to	187
Wealth-Money	275
Winter of Life, the	244
Workmen, Unreliable	84
Why the sea is salt	30



PORCELAIN TOWER OF NANKIN.

நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ஜனவிநோதினி.

இல. 1.] ஜனுவரிமீ 1875. [புஸ்த. VI.

நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம்.

முற்காலத்தில் சீனதேசத்துப் பிரதான பட்டணமாயிருந்த நான்கின் என்னும் நகரத்தில் பீங்கான் கோபுரமொன்று யாவரும் புகழ்ந்து வியக்கும்படி மிக்க சிறந்ததாயிருந்தது. இப்போது பித்தைகளும் மேடைகளும் மாளிகைகளும் அழிந்துபோய், அப்பெரிய நகரம் ஓர் சிறிய ஊராயிருக்கிறது. மேலும் சில வருஷத்துக்குமுன் நடந்த சண்டையினால் சீரழிந்து ஈனஸ்திதிக்கு வந்துவிட்டது. ஆகிலும் முன்னொருகாலத்தில் இது சிறந்த பட்டணமாயிருந்ததற்கு அடையாளங்கள் அங்குமிங்கும் சிதறியிருக்கிறதை இப்போதும் காணலாம்.

மேற்சொல்லிய பீங்கான் கோபுரம் 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசாண்டுவந்த ஒரு சக்கரவர்த்தி தன் தாயின்பெயரை என்றென்றைக்கும் இவ்வுலகத்தில் நிலைநாட்டும்பொருட்டுக் கட்டுவித்தார். அந்தத் தாயார் மற்றப் பெண்பிள்ளைகளைவிட நற்குண நற்செய்கைகளால் எவ்வளவு புகழ்ச்சிபெற்றிருந்தாளோ, அப்படியே இந்தக் கோபுரமும் எங்கும் ஈடில்லாததாயிருக்கவேண்டுமென்று அதிகப் பிரயாசப்பட்டுக் கட்டுவித்தார். கட்டி முடிக்க இருபதுவருஷகாலஞ்சென்றது. அதனுடைய அழகையும் காம்பீரியத்தையும் பற்றி அடுத்தபடத்தில் ஒருவாறு நிதானிக்கலாமேயல்லாமல், அதன் விசித்திர வேலைப்பாடு பூரணமாய் விளங்காது. இப்படத்தால் அதைக் கண்ணாரப்பார்க்க நேர்ந்தவர்கள்தவிர, மற்றப்படி யாருக்கும் அதைத் தக்கபடி வர்ணிப்பது மாளாது. அநேக வஸ்துக்களைப் படங்களி

னால் நன்றாய் அறியலாமானாலும், சில வஸ்துக்களின் பெருமை படங்களினால் நன்றாய்ப் புலப்படாது. அப்படிப்பட்டவைகளில் இக்கோபுரத்தையும் ஒன்றாகச் சொல்லலாம். இக்கோபுரம் ஒன்பது அடுக்குகள் அல்லது நிலைகள் அமைந்து, அடிமுதல் நுனிவரைக்கும் பளபளப்பான வர்ணமிட்ட பீங்கானால் மூடப்பட்டு, 200 அடி உயரமாயிருந்தது. ஒவ்வொரு நிலைக்கும் நுனியில் ஒரு பெரிய பித்தளைக்குண்டுவைத்து அதினின்றும் எட்டுமூலைக்கும் எட்டு இருப்புச் சங்கிலிகள் மணிகள் கோத்துத் தொங்கவிட்டிருந்தன. வெளிப்புறத்தில் விளக்குகள் மாட்ட இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. விளக்குகளை ஏற்றினால் வெளிச்சம் ஆகாயமெல்லாம் பரவி பார்ப்போருடைய கண்ணைப் பகட்டத்தக்க சோதிமயமாய் ஆகாயமுழுதும் விளங்கும் நானாவித வர்ணமுள்ள முத்துக்கள், விலையுயர்ந்த கற்கள், பொன், வெள்ளி, பட்டுமுதலிய அத்தேசத்திலுள்ள உயர்ந்த பொருள்களிலெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வைத்து இரண்டு பித்தளைக் கலசங்களில் அடக்கம்பண்ணி கோபுரத்தின் சிகரத்தில் வைத்திருந்தன. அப்பொருள்களில் தேயிலையும் ஒன்று.

"தந்தைதாய்ப் பேண்" என்கிற வாக்கியத்துக்கு முக்கிய உதாரணமாகத் தாயினிடத்திலிருந்த அத்தியந்த விசுவாசத்தினால் அவள்பேர் எந்நாளும் வழங்கிவரவேண்டுமென்று எண்ணி, அவ்வளவு மேலாய்க் கட்டிவைத்த அக்கோபுரம் இப்போது என்னமாய்ப் போயிற்று பாருங்கள். மனிதனுடைய செய்கைகள் யாவும் இப்படியே. 1856-ம் வருஷம் சீனா சக்கரவர்த்திக்கும் சில கலகக்காரருக்கும் சண்டை நடந்தபோது அக்கலகக்காரர் அப்பீங்கான் கோபுரத்தை நாசமாக்கிப்போட்டார்கள். உலகத்திலுள்ள அர்ப்புதகாட்சிகளிலொன்றாயிருந்த அந்தப் பீங்கான் கோபுரமாத்திரம் உட்கலகக்காரரால் உருவழிக்கப்படாதிருக்குமாயின் இப்போது ட்சீணதசையிலிருக்கிற நான்கின்பட்டணம் யாவரும் வியக்கத்தக்க சிறப்புள்ளதாக இருக்குமே.

நாமிருக்கும் அறைவீடுகளை நல்லகாற்றுள்ளதாய் அமைக்கவேண்டுவதேன்?

சுவாஸம் அல்லது மூச்சுக்காற்றானது நமது தேகத்தின் உட்புறத்திலிருந்து வாயின் வழியாயும் நாசியின் வழியாயும் வெளியே வருகிறது. அந்த சுவாஸமானது கொஞ்சம் ஜலமும் கொஞ்சம் கெட்டகாற்றுமாய்க் கலந்திருக்கிறது.

நாம் ஒரு கண்ணாடியின்மேல் மூச்சுவிட்டுப்பார்த்தால் அப்போது நமது சுவாஸத்திலிருக்கிற ஜலபாகமானது நம்முடைய கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும். அந்த நீர் முதலில் நம்முடைய சரீரத்திற்குள்ளேயிருக்கிற சூடுபட்டு நீராவியாகி வெளியேவந்தவுடன் மறுபடியும் குளிர்ந்தகாற்றுபட்டு நீராய் மாறுகிறது. அதனாலேதான் நமது சுவாஸம் எதின்மேல் பட்டாலும் அந்த வஸ்து ஈரமாய்ப்போகிறது.

சுவாஸத்திற்கலந்திருக்கிற கெட்டகாற்றைமாத்திரம் ஒருபோதும் காணக்கூடாது. ஒரு சிற்றறையில் பலபேர்கள் புகுந்துகொண்டு அவர்கள் மூச்சுவிடுகிற கெட்டகாற்று வெளியேபோகவும், வெளிப்புறத்திலிருந்து அமலவாயு உள்ளேவரவும் சிறிதும் துவாரமில்லாமல் கதவுகளையும் கவாக்ஷங்களையும் மூடிவைத்தால் அப்போது அதை நன்றாய் அறியலாம்.

அம்மாதிரியான அறைகளில் அடைக்கப்பட்டவர்களுக்கு உடனே தேஹத்தில் சகிக்கக்கூடாத ஒரு தாபமும் இறுக்கமும் உபத்திரவமுமுண்டாகும். ஏனெனில் அங்கே அவர்கள் உட்கொள்ள சுத்தமான காற்றேது? தாங்கள் உட்கொண்டு, வெளியே விட்டுவிட்ட உருக்குலைந்துபோன காற்றையும், அதனுடன் வெளியே வந்த அசுத்தமான வஸ்துக்களையுந்தான் மறுத்துமறுத்து சுவாஸமூலமாய் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

ஒருவனை ஒரு பெரும்பெட்டிக்குள் அடைத்துப் பூட்டிவைத்தால் அவன் சில நிமிஷங்களுக்குள்ளே இறந்துபோவான். ஏனென்றால், அந்தப் பெட்டி நிரம்ப அவன் மூச்சுவிடுகிற விஷக்காற்றே நிறைந்துபோய் அதனோடு கலக்கப் பிராணதாரமான நல்ல காற்று சிறிதுமில்லாமல் போய்விடுகிறது.

அதற்கு இதோ ஒரு நல்ல திருஷ்டாந்தம் பாருங்கள். ஏறக்குறைய பத்துவருஷங்களுக்குமுன் சிலர் அயர்லண்டிலிருந்து லிவர்பூல் நகருக்குப்போக நீராவிக்கப்பலிலேறிச் சென்றார்கள். அதன்

மாலுமிக்கு மூச்சினாலுண்டாகிய கெடுதி தெரியாது. அதனால் அவன் மழைக்காற்றென்றுண்டாவதறிந்து பயணக்காரர் அனைவரையும் அறைக்குள் போம்படி உத்தரவுபண்ணினான். அந்த அறையோ அவ்வளவு ஜனங்களுக்குச் சிறிதும் போதாததாயிருந்தது. ஆயினும் அவன் உத்திரவின்படி யாத்திரைக்காரர்களெல்லாம் வெகு வருத்தப்பட்டு அச்சிற்றறையில் புகுந்தனர். உடனே அந்தக் கப்பற்காரன் சிறிதும் ஆலோசியாமல் அக்கப்பலின் மேற்றளத்திலுள்ள துவாரங்களை அடைத்துக் கதவுகளையும் பூட்டக் கட்டளையிட்டான். அப்படியே அதில் ஒரு சந்துகூட இல்லாமல் அடியோடு அடைத்துவிடவே வெளிக்காற்று உள்ளே புகவும், உள்ளிருந்து மூச்சுக்காற்று வெளியேவரவும் அவகாசமேயில்லாமற்போயிற்று. அதற்குள் அடைத்தவர்கள் மேலும்மேலும் தங்கள் மூச்சையே இழுத்துவிட நேரிட்டது. அதனால் அவர்களுக்குப் பிராணாந்தமான உபாதியுண்டாயிற்று. தங்களால் கூடியவரையில் வெளியே வர முயன்றனர்; கூடாமற்போயிற்று. கடைசியில் அவர்களில் ஒருவன் மேல்தட்டை முறித்துக்கொண்டு வெளியேவந்து மாலுமியைக் கண்டு, அப்பா, பயணக்காரர்கள் மூச்சுவிடமாட்டாமல் என்ன திக்குமுக்காடுகிறார்கள் பார் என்றான். அதைக் கேட்டு அவன் கதவைத் திறந்துபார்க்கிறபோது 72 பேர் செத்துக்கிடந்தார்கள். அநேகம்பேருக்குப் பிராணம்போகத் துடித்துக்கொண்டிருந்தது. மிகுந்தவர்கள் பெருங்காய்ச்சலில் அடிபட்டுக்கொண்டிருந்தார்கள். இம்மாதிரி மூச்சுக்காற்று நல்ல காற்றோடு கலவாதிருந்தால் அவ்வளவும் விஷக்காற்றேயன்றி வேறல்ல.

இதற்கு நமது தேசசரித்திரத்திலிருந்து மற்றொரு திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டக்கூடும். கல்கத்தா நகரத்தில் ஏறக்குறைய 120 வருஷத்துக்குமுன்னே ஒருநாளிரவில் 'இருட்டறை' என்னும் ஒரு சிற்றறையில் நூற்றுநாற்பத்தாறு இங்கிலீஷ்காரர்களை அந்நகரத்து நபாபுவான ஸுராஜாடவுலா என்பவன் கைதிகளாகப் பலவந்தமாய் அடைத்துப்போடும்படி உத்தரவுபண்ணினான். அப்படியே அடைத்துப்போடவே சில நிமிஷங்களில் நெருக்கத்தாலுண்டாகிய வெப்பத்தாலும் தாகத்தாலும் அவர்கள் மிக்க வருத்தமுற்று, விஷவாயுவாய்ப்போன தாங்கள் விட்டுவிட்ட சுவாஸத்தையே மேலுமேலும் உட்கொண்டிருந்தார்கள். மறுநாள் உதயத்தில் கதவைத்திறந்து பார்க்கும்போது நூற்று இருப்பத்துமூன்றுபேர் மடிந்துபோயிருந்தார்கள். இருபத்துமூன்றுபேர்மாத்திரம் அந்த மாரணபத்துக்குத் தப்பிப்பிழைத்து வெளியே வந்தார்கள் என்று சரித்திரத்தில் படித்திருக்கிறோமே. இது அவனவன் விட்ட சுவாசத்திலிருந்தும் தேகத்தினின்றும் உண்டாகிய வியர்வையிலிருந்தும் புறப்படுகிற விஷவாயுவை அவரவர்கள் உட்கொண்டதனால் விளைந்த பயனல்லவா?

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஆதலால் நமது நன்மைக்காக நாம் வாஸஞ்செய்யும் வீடுகளைக் கீழ்சொன்னகப்பலறையைப்போலவும் இருட்டறையைப்போலவும் கொஞ்சமும் காற்றுநுழைய விடமில்லாமல் செய்யக்கூடாது. வழிகளுண்டாயிருந்தால் கதவுகளிலும் ஜன்னல்களிலுமுள்ள வெடிப்புகளிலும் புகைபோக்கிகளிலும் இன்னும் இங்குமங்குமுள்ள சிறுதுவாரங்களிலும் நுழைந்து உள்ளேவந்து நல்லகாற்று நமக்குச் சுகம்விளைக்கும். எப்போதும் உள்ளேயேயிருப்பவர்கள் சுகமடைவதற்குக் கீழ்ச்சொன்ன வழிகளால் வருகிறவழி ஒருபோதும் போதாது. அப்போதைக்கப்போது உள்ளேயிருக்கிற காற்று அப்புறம்போகவும், நல்லகாற்று உள்ளேவரவும் கதவுமுதலியவைகளைத் திறந்துவிட்டால் அவர்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும்.

நெருப்பானது காற்றிலுள்ள கெட்டகுணத்தை மாற்ற மிக உபயோகமானது. நாம் படுக்கும் இடங்களில் நெருப்புமில்லாமல், தூங்கும்போது காற்றில்லாமல் கம்மென்றிருக்கவேண்டுமென்று காற்றுநுழைய இடமில்லாமல் சந்துகளை அடைத்துவிட்டுப் படுத்துக்கொண்டால்,காலையில் எழுந்திருப்பதற்குமுன்னமே உள்ளெல்லாம் கெட்டகாற்று நிறைந்துபோவதுமல்லாமல், தேஹத்திற்குள்ளிருக்கிற அழுக்குகள் தோலின்வழியாய் வெளியேவந்து துணிகளிலும் படுக்கைகளிலும் நிரம்பப் படிந்துபோம். ஆதலால் நாம் எழுந்தவுடனே வேறு சுத்தமான ஆடைகளை அணிந்து, கதவுகளை நன்றாய்த் திறந்துவிட்டு, மறுபடி படுக்கைபோடுவதற்குமுன், முன் படிந்த அழுக்குகளெல்லாம் போம்படி நாம் படுத்திருந்த துணிகளை எடுத்துத் திருப்பிப்போட்டு நல்ல காற்றில் உலர்த்த வேண்டும்.

நாம் நல்லகாற்றுள்ள வெளிப்புறங்களில் போயிருந்தால் அவ்விடத்தில் நாம் மூச்சுவிட்டவுடனே அந்த கெட்டகாற்று நல்ல காற்றோடுகலந்து மறுபடியும் ஆகர்ஷிப்பதற்கு ஒரு தடையுமில்லாமல் சுத்தமாய்விடுகிறது. நாம் நல்ல காற்றுள்ளவிடங்களில் வஸிப்பது நமக்கு மிகவும் சவுக்கியமாயிருக்கிறதென்பதற்கு இதுவே முக்கியமான காரணமாயிருக்கிறது. இதனாலேதான் சாதாரணமாய் வீடுகளில் வேலைசெய்கிறவர்களைப்பார்க்க வெளியே வேலை செய்கிறவர்கள் அதிகமாய்ச் சுகித்துவாழ்கிறார்கள்.

ஸிந்துதேசம்.

ஸிந்துதேசமானது நீர்வளமும் நிலவளமும் பெற்றதல்ல. நேர்த்தியான காக்ஷிகளும் அதில் அதிகமில்லை. அதிலுள்ள ஜனங்களையும் அதைப் பார்க்கக் கருதி அநேகவிடங்களிலிருந்து வருவோர்களையும் மிகப் புத்திவிசாலமுள்ளவர்கள் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, லோகசிருஷ்டியின் ஆதிகாலத்திலிருந்த மனுஷர்களுக்கும், தற்காலத்தில் விசேஷ சீர்த்திருத்தமுள்ள தேசத்தாருக்கும் உள்ள வித்தியாசத்தைக் காணாமல்போகார். விஷயமிப்படியிருக்கினும் சைந்தவர்களுடைய நடை உடை பாவனையைக்குறித்துச் சொல்லப்புகுங்கால் இதைப் படிப்போர்க்கு இன்பம்கொடுக்குமே, யொழிய அவர்கள் காலம் வீணேபோக்கினதாகாது.

ஸிந்துதேசத்தை ஆதியில் இந்து அரசர்களே ஆண்டுவந்தார்கள். ஹிஜரி 77-ம் ஸுல் இது மகமதியரால் கைக்கொள்ளப்பட்டது. அது தொடங்கி அங்கிலேயர் கைவசமான நாள்பரியந்தம் துருக்கராலும், அவர்களுடைய சேனைகளாலும் சைந்தவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அன்றியும் ராஜாங்கத்தார் இவர்களை பெலுச்சியர் கபூலியர் முதலிய கொள்ளைக்காரரால் வதைப்படுவதினின்றும் காப்பாற்றினதுமில்லை.

இங்கிலீஷ் துரைத்தனத்துக்குமுன் இந்த தேசத்தை ஆண்டுவந்தவர்களுக்கு அமீர்களென்று பெயர். அவர்களுக்கு இரண்டு பிரதான நகரங்களுண்டு. சிலர் ஐதராபாகத்திலும், மற்றோர் கைர்ப்பூரிலும் அரசிற்குரிய காரியங்களை நடத்திவந்தனர். இருந்தாலும் இவர்கள் ராஜாங்கக் காரியங்களைச் சீராக நடத்தினவர்களேயல்லர். இவர்களுக்குட்பட்ட, படைவீரரோவெனில் தத்தம் எஜமானனுக்குரிய மரியாதையைக் காட்டுவதுமில்லை. அவன் ஸபைகூடி இருக்கும்போதுகூட ஸொல்பமேனும் அச்சமின்றிக் காட்டாள்கள்போல கூச்சல்போட்டு, ஸபைக்கு முன்னிருப்பவனைப் பிடித்துத் தள்ளி அவன் முன்னே உட்காருவதும், அவன் குதிரை ஸவாரி போனால் செல்வதற்கரிதான இடங்களில் அவனைப் பின்னேவிட்டு அவன் மேல் உராய்ந்துகொண்டே தங்கள் குதிரைகளை முன்விட்டுச் செல்வதும், ஓ! உனக்குமுன்னே நான் போனேனே, நீ என்ன சேவுகன் என்று உரத்த சத்தத்துடன் கத்துவதும், கைகொட்டிச் சிரிப்பதும், எந்த ஸமயத்திலும் சீர்த்திருத்தமின்றியும், தைரியத்துடன் அடங்காப் பிடாரிகளைப்போலத் திரிவதும் ஸிந்துதேசத்திலுள்ள படைவீரர்களான பட்டாணிகளின் ஸ்வபாவம்.

இவர்கள் தங்கள் எஜமானர்களுக்கு உட்பட்டு நடந்தவர்களானாலும், இந்துக்களை இம்ஸித்தவர்களல்ல. ஏனெனில் இந்துக்கள் இத்தேசத்தில் மிகுந்த தனிகர்கள். அன்றியும் ஸகலவிதமான கைத்தொழிலும் பயின்றவர். எந்தவேலையும் இவர்களின்றி முடியாது. இவர்களே பெரிய வியாபாரிகளாம். ஆனதுபற்றி ஆத்மஸம்ரக்ஷணார்த்தம் இந்துக்களுக்கு இவர்கள் துன்பம் செய்யாமலிருந்தார்களேயன்றி "அஹிம்ஸாப்பரமோ தர்மஃ" என்பதை அநுசரித்துப் பிறருக்குக் கொடுமைவிளையாமை அறத்திலெல்லாம் சிறந்ததென்று நம்பினோரன்று. பட்டாணிகளுக்கேதுமோ

ஸாமான் விலையாகவேண்டுமானால் ஒரு இந்துவின்மூலமாகவே அதை விலைப்படுத்தவேண்டும். இவன் விலைபேசித் தீர்மானம்செய்யும்போது நன்றாக உடுத்தி தூரத்தில் சொல்லவொண்ணாக் கொர்வத்துடன் ராணுவ வீரனான பட்டானி நிற்க, அழுக்குவஸ்திரம் பூண்ட இந்து, வியாபாரியை மிகவாகக் கெஞ்சி அவன் கையைத் தன் கையால்பிடித்து அதன்மேல் துணியைப்போட்டு மூடி ஒருவர் விரலை ஒருவர் பிடித்துக்கொண்டு வ்யாபார ஸங்கேதப்படி இத்தனை விராகன் விலையென்று தீர்மானிப்பான். இப்படிச் செய்வதற்கு "கைதட்டுதல்" என்று பெயர்.

நானாதேசத்துக் கம்பளங்கள், சாலுவைகள், ரவைசெல்லாக்கள்முதலிய நாணயமான வஸ்திரங்களை விற்கிறபடியினாலும், ராஜாங்கப் பொக்கிஷவீட்டில் பணம் குறைந்தால் வரிபோட்டு, இவ்வியாபாரிகளிடம் வேண்டும் தொகையை வசூல்செய்துகொள்வதினாலும், இந்துவர்த்தகர்களை துரைத்தனத்தாரான அமீர்கள் இம்ஸிப்பதில்லை. இவர்களுடைய பொக்கிஷத்தில் பணம் குறைந்தால் வர்த்தகர்களிடம் அதற்கு ஈடுசெய்வது வெகு விநோதமான ஸங்கதி. ஸிந்துதேசத்தில் வியாபாரிகளிருக்கும் நகரந்தோறும் அமீர்கள் தங்களுடைய வேலைக்காரர்களை அனுப்பி இவ்வளவு ரூபாய் கொண்டுவாவென்று சொல்வது வழக்கம். இவ்வாறாக அநுமதி பெற்ற வேலைக்காரன், வியாபாரிகள் விசேஷமாக இருக்கும் பட்டணங்களுக்குப்போய் பலானவர்கள் இவ்வளவு தொகைகொடுக்கவேண்டுமென்றும், நகரத்தின் குடிகளான மற்றோர் கொடுக்கவேண்டும் தொகை இன்னதென்றும் விவரமாகச் சொல்வான். கொடுப்பதில்லையென்று எதிர்க்கக் குடிகளுக்குத் தைரியம்போராது. ஆனபடியால் பணக்காரர்களெல்லாரும் ஒன்றாகத் திரண்டு ஊருக்குப் புறம்பேயுள்ள தோட்டத்தில் கூட்டம்கூடி, அமீர்களிடமிருந்துவந்த மனுஷன் நகரம்விட்டுச் சென்றால்தான், தாங்கள் அதற்குள் வருவோமென்றும், இல்லாவிடில் அன்னமாகாரமின்றி ப்ராணத்தியாகம் செய்வோமென்றும் மிக உறுதிப்பாடாகத் தீர்மானிப்பார்கள். வந்த மனுஷனோவெனில், பனங்காட்டுநரி சலசலப்பிற்கஞ்சுமா என்றதுபோல, உடனே ராணுவ உதவியின்பேரில் குடிகள் கூடியிருக்கும் தோட்டஞ்சென்று தலைவரான சிலரைப்பிடித்து, கோவினது அஸ்திமுதலியதாற்செய்த ஹாரத்தை அவர்கள் கழுத்திற்போட்டு, மாம்சம் முதலியதைத் தின்னும்படி கட்டாயப்படுத்தி, கூடினகூட்டத்தைக் கலைத்து, வர்ணாச்ரம பேதமின்றித் திட்டி இம்சித்துக் கேட்டதொகையைக் கொடுத்தால் கொடுமை விளக்காமற்போவதாக வாக்களித்து வந்தகாரியத்தைச் சீர்ப்படுத்திக்கொண்டுபோவான். இவ்வாறான இடும்பையினின்று தப்பும்பொருட்டு மிக திரவியவான்களும் சாதாரணமாக வெளேரென்று விளங்கும் உடைகள், தங்கவளையல், சங்கிலி, ஆணிமுத்துக்கடுக்கன், காஸ்மீர கலாபத்துச் சாலுவைகள், நாணயமான மக்மல்பட்டில் விசித்திர விநோதமாக வேலைசெய்த சோடு முதலியவற்றை அணிந்துவருவது வழக்கமாக இருந்தாலும், அமீர்களுடைய வேலைக்காரர்கள் பணம் தண்டவந்திருக்கும் காலங்களில்மாத்திரம், அழுக்கடைந்த வஸ்திரங்களையும் கிழிந்து பீறல்பீறலாகப்போன கந்தைகளையுந் தரித்து ஏழை வேஷம்பூண்டு பிச்சைக்காரர்கள்போலத் தெருத்தெருவாகத் திரிவார்கள். இவ்வாறாக இவர்கள் கஷ்டப்பட்டபோதிலும் தண்டமிறுப்பதில் தப்புவது வருத்தம். ஏனெனில் இவர்கள் பரம்பரை யாண்டியல்லரென்றும், பஞ்சைவேஷம்

பூண்டது பாசாங்கென்றும் உண்மை உரைக்கப் பிரதிகரிலும் அநேக
குட்டுணிகளுண்டு. கடைசியாக இவர்கள், காலச்சுற்றின பாம்பு கடித்தா
லொழியப் போகாதென்று நம்பி வரிகொடுப்பார்கள்.

அமீர்களுடைய கொடுங்கோலரசிற்குத் தப்பி, அவர்களையும் கொடு
மையாக இந்துதேசத்தில் நடத்துவோர் ஸயித் என்ற மகமதிய ஜாதியரொ
ருவர்தான். ராக்ஷதனுக்கு ஒரு புரோக்ஷதனென்றதுபோல, கடவுள் உவ
மகிழ்ந்திவர்களைப் படைத்தனர்போலும். இவர்கள் மகம்மது நபியின் ஸந்
ததியாரென்று சிலரும், அல்லரென்று சிலரும் சொல்லுகிறார்கள். எப்
படியிருந்தாலும் இவர்களுக்குள்ள சுதந்திரம் கொஞ்சமில்லை. இவர்க
ளுக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது. என்றாலும் கொரா
னின் சில அத்தியாயங்களைக் கண்டாபாடமாகக் கற்றோர். மேலும் தத்தம்
மனம்போனபடியெல்லாம் மதஸம்பந்தமான இதிஹாஸங்களைச் சொல்ல
வல்ல மனக்கட்டுடைய அண்டப்புளுகர். இவ்வாறாக இவர்கள் சொல்
வது சிலகால் அஸந்தர்ப்பமாகவும், அஸாத்தியமாகவுமிருக்கும். அயோக்ய
முள்ள இந்தக் குருக்கள்மார் ஸைந்தவர்களுடைய மூடத்தனத்தாலும், புத்தி
யின்மையாலும் ஜீவித்திருப்பதுமன்றி, இத்தேசத்தின் ஸாரக்ஷேத்திரங்களை
யும் கடமை, பகுதி, வரி, இறையின்றி அநுபோகித்துவருகிறார்கள். மே
லும் படிப்பும் தெய்வபக்தியுமின்றித் தங்கள் தேசஸ்தர்களால் மிக வணங்
கப்பெற்றும், நம்ப இடமில்லாத கதைகளைச் சொல்லி, இல்லாக்கொடுமை
யை எல்லாம் விளைத்தும், மனம்போனபடி நடந்தும் வருகிறார்கள். எவன்
என்ன பெரிய தப்பிதச்செய்கையைச் செய்தாலும், தான் செய்தது ஒரு
ஸயித்சாதியன் உத்தரவுப்படி என்றால், அவனைத் தெண்டிப்போர் யாரு
மில்லை. ராஜாங்கவிஷயத்திலும், குடிகளுடைய சொந்தவிஷயங்களி
லும் அநேகக் கலகங்களை இவர்கள் செய்வதும் வழக்கம்.

ராஜஸ்திரீகள் வசிக்குமிடத்திலும் இவர்கள் தாராளமாகப்போகலாம்.
இவர்களில் ஸன்னியாஸாச்ரமம் பூண்டோர்கூட, வெகு ஸ்திரீகளை மணம்
புரிவதும், அநேகரை அடிமையாக வைத்துக்கொள்வதும், இல்வாழ்க்கை
யில் அதி ஆசாபாசம்கொண்டு, நிலம், நீர், நெல்முதலியவற்றை சேகரிப்
பதில் மனஞ்செலுத்துவதுமாக விருக்கிறார்கள். இவர்களில் சிலர் வைத்
திருக்கும் உச்சிச்ரவம்போன்ற குதிரைகளையும், அவற்றின் ஆபரணங்
களையும், வேலைக்காரர்களது திரள்களையும், கொண்டாடும் பண்டிகைகளை
யும் பார்ப்போர், இங்ஙனம் நடத்துவோரென்னுட்டரசரோ, அல்லது
இவர்கள் வாழும் இடம் கோயிலோவென்று ஐயமுறுவர். இருந்தாலும்
இவர்களில் அநேகர் அஸங்கியமான கோரரூபிகள். அழுக்கடைந்த பச்
சைக்குல்லாய்களைத் தரிப்போர். அட்டுப்பூண்ட வஸ்திரதாரிகள். இவர்த்
திக்கொள்ளைக்காரர்கள்போல அடிக்கடி கூட்டம்கூட்டமாகத் திரிவதில்
இன்பமடைவோர். ஜீவனார்த்தமாக கத்தியை உபயோகிப்போர் கத்தியா
லேயே மரணமடைவார்களென்பது அநுபோக ஸித்தாந்தமானாலும் அது
இவர்கள்பால் பயனற்றது. ஏனெனில் ஸ்திரீகளையாவது, ஸயித் ஜாதி
யாரில் ஒருவனையாவது கொல்வோர் பாழ்நரகில் கற்பகோடிகாலம்
ஆழ்ந்துகிடப்பாரென்பது கொரானுடைய வாக்யம். ஆனபடியால் இந்
நாட்டில்வாழும் ஸயித் ஜாதியாரில் பெரும்பான்மையோர் திருடுவதும்,
ஒருதடவைகூட விசாரணைக்காவது, தெண்டனைக்காவது, உட்படாமலி

ருப்பதும் வெகு ஸாதாரணம். சண்டையிலோ மற்றகாலத்திலோ ராஜாங்கத்தாருக்காவது, உத்தியோகஸ்தருக்காவது கிடைக்கும் கொள்ளையும், லஞ்சமும் ஸயித் ஜாதியாருடையவையாகும். இதற்குக் காரணமாக அடியில் வரும் கதையைச் சொல்லுகிறார்கள்:—மூறிமலையில் நமது ராஜாங்கத்தாரான அங்கிலேயருக்கும் லைஸந்தவருக்குமுண்டான சண்டையில் அநேக பெலுச்சிய ரணவீரரும், ஹிந்துதேசத்திய பட்டாணிச் சிப்பாய்களும் இறந்தார்களென்றும், இப்படியானபிறகு ஒருநாள் சண்டை வெகு உக்ரமாக நடந்துகொண்டிருக்கும்போதே, ஸயித் ஜாதியானொருவன் அங்கேவந்து நின்றுகொண்டு, ஓ! காபூருடைய குண்டே, அல்லாகுதாவினுடைய அடிமைகளைக் கொல்லாமற்செல்லென்று கையை நீட்டிச்சொன்னதாகவும், அதுமுதல் ஒருவனாவது இங்கிலீஷ்காரருடைய குண்டினால் இறக்கவில்லையென்றும், இந்த ஙியாபகக்குறியாகவே சண்டையில் கிடைக்கும் கொள்ளையையும் ஸர்க்காரில் விதிக்கும் அபராதத்தையும் உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கும் லஞ்சத்தையும் ஸயித் ஜாதியாருக்கு ஜாரிசெய்ததாகவும் ஸாதாரண ஜனங்கள் சொல்லுவது ஸகஜம். படிக்க அறியாத வீண்பக்தியுள்ள ஜனங்களுடைய மூடத்தனத்தையும், இவர்களை மோசம்செய்வது எளிதென்றறிந்த குருக்கண்மாருடைய கொடுஞ்சிந்தனையையும் தெரிவிப்பதற்கல்லாமல் இக்கதையை நாம் நம்பி இங்கு வரைந்தோமென்று எண்ணுவோர் யாருமில்லையல்லவா?

லைஸந்தவர்களுக்கு ஸ்வர்ணம்செய்தல் எளிதென்றும், இத்தொழிலை சிலர் கற்றிருக்கிறார்களென்ற மலைப்புமுண்டு. கொஞ்சகாலத்திற்குமுன் இந்தத் தேசத்திலொருவன் வந்திருந்தான். அவன் வியாபாரியுமல்ல, உத்தியோகஸ்தனுமல்ல, பெரிய ஸந்ததியில் பிறந்தவனுமல்ல, ஸர்தாருமல்ல. இத்தேசம் வந்தவுடனே ஒரு பெரிய வீட்டைக் குடிக்கூலிக்கு வாங்கிக்கொண்டு, பஞ்சபக்ஷபரமான்னத்துடன் அநேகருக்கு புஷ்டான்னபோஜனங்கொடுத்து, நடனாட்டியசாலைப் பெண்களுக்கு அளவிறந்த திரவியமளித்து, ஸம்பரமமாகக் கொஞ்சகாலம் கழித்தான். இந்த ஸங்கதி ஊரெங்கும் பரவவே இவனிடம் கற்கவேண்டிய விஷயமொன்றுளதென்று தீர்ந்தது. ஜனங்களிடம் இவ்வெறியாசையுண்டானதை அறிந்து இதை அதிகரிக்க விடுவதில்,வந்த வஞ்சகன் மனஞ்சென்று,தெருவேபோவோரை வலுவில் கூப்பிட்டு, ஏதோ சில கைத்தந்திரத்தால் தாம்பிரத்தைத் தங்கமாக்கினதாகக் காட்டினான். உடனே இச்சங்கதி காட்டுத்தீபோல நாடெல்லாம் பரவிற்று. சில நாளைக்கெல்லாம் ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள சகல நகைநட்டுகளையும், பண்டுபாத்திரங்களையும் இவனிடம்கொடுத்து சொக்கத்தங்கமாக்கிக் கொடுக்கச்சொன்னார்கள். எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு இனி இதுபோன்ற ஸமயம் கிட்டாதென்றெண்ணி ஓரிரவில் தன்னந்தனியாக ஓட்டமெடுத்தான். போனவிடம் யாருமறிந்திலர்; இதனால் இப்போது லைஸந்தவர்களில்முன் லக்ஷாதிபதிகளானோரும் ஜாடுமாலிகளாக ஆகாரத்திற்கு வழியின்றி நிற்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

தேஜசும், உஷ்ணமும்.

சகல ஜீவமூலவர்க்கங்களுக்கும் ஒளியும் அனலும் இன்றியமையாதனவாயினும் "அளவுக்குமிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பதுபோல், இவ்விரண்டும் மிதமிஞ்சினால் கேட்டை விளைவிக்கும். உஷ்ணம் குறையக்குறையச் சீதளம் மேலிட்டுப் பிராணநாசம் விளைவிக்கும். பூமியின் உத்தரபாகத்தில் சீதமண்டலத்துக்குச் சமீபமாயிருப்போர்க்குக் குளிரைப்போன்ற சத்துரு வேறொன்று மில்லை. இதன் கொடுமையைக் குறைக்கும்பொருட்டு அவரவர் தம்மாலியன்றமட்டும் முயல்வார்கள். பிராண சுகங்களுக்குப் பெரும்பகையாகிய இதைப் போக்கடிக்க எவ்வளவு பாடுபட்டாலும் படுவர். மழை பனிமுதலியவற்றாலுண்டாகும் குளிரை நீக்கும்படி அனலுண்டாக்குவது எவ்விடத்திலும் சகஜம். குளிரைச் சகிக்கமுடியாமல் மந்தையிலிருக்கும் ஆடுமாடுகள்போல் நெருங்கி வாசஞ்செய்கிறார்கள். பலகணிமுதலிய இல்லாமல் ஒடுக்கமாய் வீடுகட்டுகிறார்கள். இடையில் வெளியில்லாமல் கட்டடம் சமைக்கிறார்கள். இதுவே பல கொடிய வியாதிகளுக்கு மூலம். இது ஒளிக்க இடமற்றுத் தலையாரிவீட்டில் புகுந்ததுபோலாம்.

ஜனங்கள் நாகரிகத்தில் வளரவளர செயற்கையளவிற்கு வேண்டிய வெப்பமும் அவசியமும் மேன்மேலும் விரும்பப்படும். சில தேசத்தவர்களுக்கு அக்கினிஸ்தானம் அகப்படலரிது. அகப்பட்டாலும் சமையல் செய்வதற்குப் போதுமானதாயிருந்தால் பெரிது. திபேத், ஐஸ்லாண்ட், ஆசியா, அமெரிக்காக்கண்டங்களின் உத்தரபாகங்களில் இருப்போர் கதி இதுதான். வேறு சிலரோ ஸாதனம் அகப்பட்டாலும் சோம்பேறித்தனத்தால் கஷ்டப்பட்டு நெருப்புமூட்டிப் பாகம்பண்ணுவதை விட்டுவிட்டு, பலவகையான மாம்சங்களைச் சீவல் சீவலாயறுத்து வெய்யிலிலுணர்த்திப் புசிப்பார்கள். தென் அமெரிக்காவில் லாப்பிளாட்டா மாகாணத்தில் வசிக்கும் குவாக்கஸ் என்பவர்கள் இவ்வாறுதான் செய்கிறார்கள். ஆபிரிக்காவின் மத்தியபாகங்களில் இருப்போர் முழுமூடராயிருந்தாலும் அக்கினிஸாதனங்களை அரும்பொருள்போல் நாடித்தேடி அனல்மூட்டி லோகசுத்திசெய்வதில் கைதேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இவ்வாறே மங்கொலியா, துருக்கமானியா, சீன துருக்கிஸ்தானமுதலிய தேசங்களில் இருக்கும் வனவாசிகள், கம்மாளன் உலைக்களத்துக்குதவும் வேர்விறகு முதலியவற்றைப் பொன்போல் மதித்துச் சேர்ப்பார்.

அக்கினி ஸாதனங்களில் தொன்றுதொட்டுப் பெரும்பான்மையவாகிய சுதந்தரம் விறகே. கடவுள் வளையாதுகொடுத்த வற்றுள் ஒன்று இதுவென்பதற்குச் சந்தேகமில்லை. விறகைச் சுதந்தரமென்று மேலே கூறியது என்னை? எம்முன்னோர் வனங்களைப் பரிபாலிக்காமல் கண்டபடி வெட்டிக் கொளுத்திப்போட்டால் விறகு எப்படியகப்படும்? இக்குறைவொன்றோ? மேகமானது சூல்கொண்டு மழை வருஷிப்பதற்கு முக்கிய காரணபூதமாயிருக்கும் விருக்ஷாதிகளை விவேகமின்றி குறைப்பதால் மழைகுன்றச் சகல வளங்களுங் குன்றிப்போம். வட அமெரிக்கா தன் எல்லையில் மேகமண்டலத்தை அளாவிய மரங்கள் நிறைந்த கங்குகரையில்லா முல்லைநிலங்களெல்லாம் வெட்டவெளியாய்ப் பாழ் அடைந்த பாலைநிலம்போலிருப்பதைப் பார்த்துப்பார்த்து, இந்தியா, கிரீஸ், பிரான்ஸ்தேசங்களைப்போல் பரிந்து வருந்திப் பெருமூச்சுவிடுகின்றது. நாகரிகமுற்ற தேசங்களில் விறகு என்னும் அக்கினி ஸாதனம் அரும்பொருள்களில் ஒன்றாய்விட்டது. இது இவ்வாறானதற்கு முன்குறித்ததைவிட வேறுகாரணங்களுமுண்டு. மரத்தைவெட்டி வேறிடங்களுக்குக் கொண்டுபோவது கஷ்டம். உருவிற் பெரிது பழுவில் அதிகம். அது கொடுக்கும் அனலிற் சிறிது. நிலக்கரி, சுடுகரிகளினால் உண்டாகும் அனலினும் விறகினாற் பிறப்பது பாதி. சில இடங்களில் கரிக்குப் பதிலாய் 'பீட்' என்னும் இளங்கரியை உபயோகிக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டின் அடுப்பிலும் உண்டாகும் அனல் மிதமானது. இவ்வனல் சற்றே அதிகப்பட்டால் இரும்பை நெருப்பெழக்காய்ச்சவும் மெல்லிய வெள்ளித்தகட்டை உருக்கவும் கூடும். பொன் இரும்புமுதலிய கெட்டிலோகங்களை உருக்க வேண்டுமானால், கம்மாளன் உலைக்களத்திலிட்டு பெருந்துருத்தி கொண்டு ஊதி, சூட்டை அதிகப்படுத்தினாலொழிய முடியாது. இப்படிச் செய்தும் பயன்பெறாதுபோவதுமுண்டு. பெஸ்மீயர் எஃகை உருக்குவதற்காவது, பெரும் இரும்புக்குவையை வெண்ணெய்போற் குழைத்து மிகப்பெரிய யுத்தமரக்கலங்களுக்குக் கவசமாகும்படி தகடாய் விரிப்பதற்காவது முன்சொன்னமுறை உதவாது என்று இதற்கு வேறுவிதமான உலைக்களம் நிர்மாணித்திருக்கிறார்கள்.

அதில் மணங்கு மணங்காய்க் குவிக்கும் கரியை பக்ஷித்துவிட்டுக் கண்ணைப் பறிக்கும்படி கனன்று சுவாலை வீசுவதைப்பார்த்தால், இது எனக்கென்ன மணக்கக்காணுமா? இன்னும் போடு போடு என்று கேட்பதுபோலவிருக்கின்றது. இதன் உக்கிரத்தை நாம் கண்டால், இதுதான் வடவையோ, அதன்கூறோ, இடம் பிறழ்ந்ததோவென்றஞ்சாதுவிடோம். இரும்பைப் பாளம்பாளமாய்க் கட்டிகட்டியாய் வாங்கிக்கொண்டும் இன்னும் போதாதென்ற பாவனையாய்ச் சிங்கவேறுபோற் குமிறிக் கெர்ஜ்ஜிக்கும் அதி

உக்கிரமான உலைக்களமும் இளைக்கும்படியான அனலை ரஸவாதியோ ஸ்வல்ப ஸாதனங்களைக்கொண்டு ஆரவாரமென்கிற பேச்சுமில்லாமல் செய்வானென்றால், ஆர்தாம் ஆச்சரியத்தோடு அது எப்படி எப்படியென்று வினவாதுவிடுவர்? அவனுக்கு வாயுவே அக்கினிஸாதனம். சில பாத்திரங்களும் குழாய்களுமே உலைக்களம். இவற்றால் உண்டாகும் அனலுக்கு நிகரில்லை. (Hydrogen) ஜலிலை, (Orygen) அமிலை என்னும் இரண்டுவாயுவின் சேர்க்கையால் ஜலமுண்டாகிறது. இவ்விருவகையான வாயுவையும் சிறு குழாய்களமைந்த இருபாத்திரங்களில் நிரப்பி அவற்றிலுள்ள அடைப்பாணிகளை விரலால் திருப்ப உள்ளிருக்கும் வாயு குழாய் வழியாய்ச் செல்லும். இக்குழாய்களைப் பொருத்தி பொருத்துவாயில் ஓர் வர்த்திபிடித்தால் இவ்விருவாயுவும் எரியும். இதில் பிளாட்டினம், ரோடியம் என்னும் கெட்டியான லோகங்களோ, உருக்கக்கூடாதென்று தொன்றுதொட்டுக்கூறிய இதரமான லோகங்களோ 'எரியினிழுது' போல் கரையும். இதுமாத்திரமா? தாதுவர்க்கங்களை எரிக்க, உருக்க, மாற்ற, சேர்க்கப் பிரிக்க மின்ஸாரம் இன்னுஞ் சிறந்தது.

ரஸவாதிகள் அதிசூட்சமாய் அனல் உண்டாக்குவர். வெந்த சுண்ணாம்புக்கல், திராவகம், சிலலோகங்கள் ஆகிய இவற்றில் தண்ணீர் சேர்ந்தால், அவற்றில் சமஷ்டிரூபமாயிருந்த அனல் வெளிப்படும். ஆனால் இந்த ஸாதனங்களை அக்கினிகொண்டே செய்யவேண்டும். இவற்றையுண்டாக்குவதற்குவேண்டிய அனலிலும் இவை கொடுப்பது குறைவானபடியால், இவ்வகை பயன்படாது. விறகுமுதலியவற்றை எரித்து சூடு உண்டாக்குவதுதான் எளிது; ஆனால் வேண்டிய விறகு சுலபமாயகப்படாதென்று முன்னே கூறியிருக்கிறோம். அக்கினிஸாதனங்களிலொன்றாகிய கரியோ, இன்னும் மனுஷர் கைப்படாமல் வட அமெரிக்கா, இந்தியா, ஆஸ்ட்ரேலியா முதலியவிடங்களில் விஸ்தாரமான கனிகளில் இருக்கின்றது. இருந்தாலென்ன? வரவர சகல வஸ்துக்களின் கிரயமும் சம்பளமும் அதிகரித்துக்கொண்டேவருவதால், மேலேசொன்ன சுரங்கங்களினின்று கரியை வெட்டியெடுத்தாலும், விலை இறங்கிப்போமென்று சொல்ல இடமில்லை. அக்கினி ஸாதனங்கள் மலியாவிட்டாலும் அவற்றின் குறைவை பரிகரிப்பதற்கு ஓர் வகையுண்டு. விறகுமுதலியவற்றை எரிக்கும்பொழுது புகையாமலும் அனல்கண்டபக்கத்தில் வீசிச் சிதையாமலும் காப்பதுதான் அவ்வகை. இம்முறையை அனுசரித்து இத்தேசத்தில் வைத்தியர் புடம்வைக்கிறார்கள். கட்டைவண்டிக்காரர் சமையல் செய்கிறார்கள்.

ஒளியும் அனலும் உண்டாக்கும்படி வாசஸ்தானங்களில் வாயுவையும் வேலைத்தலங்களில் பெத்ரோலியம் என்னும் கல் எண்ணெயையும் சாதாரணமாய் இனிமேல் உபயோகிப்பார்கள். ஆனால் வாயுதீபத்தால் உண்டாகுந் துர்க்கந்தத்தை நீக்கும்படி தகுந்த பலகணிகள்வைத்து வேண்டியகாற்று உலாவும்படி செய்து கொள்ளவேண்டும்.

ஹாம்ரன்ஸ் என்னும் ஜனங்கள்.

புதிய தேசங்களில் பிரவேசித்து அங்குள்ளவற்றைக் கண்டு பிடிப்பதற்காகப் பிரயாணங்கள்சென்று பெருமுயற்சிசெய்தவர்களுக்குள் மிகுந்த புகழ்பெற்றவராகிய ஸர்ஸாமியுயல்பேகர் என்பவர், தாம் ஆப்ரிகாகண்டத்தில் அபிஸினியா தேசத்தில் நைல் நதியில் வந்துவிழுகிற சிற்றாறுகளின் உற்பத்தி ஸ்தானங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் போனவிடங்களில் சந்தித்த ஒரு யவன ஜாதியாருடைய வரலாற்றை அவர் தெரிவித்தபடி அடியில் எழுதப்படுகிறது; அது மிகவும் வேடிக்கையாயிருக்கும்.

நான் ஸோபை என்னும் நாட்டுக்கு வந்துசேருவதற்குமுன் காஸாலாவுக்குத் தெற்கிலுள்ள நாட்டில் அரேபியர்களைச்சேர்ந்த ஒருவகை ஜாதியார் வாசஞ்செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தேன்; அவர்களுக்கு ஹாம்ரன்ஸ் என்று பெயர். வேட்டையாடுந் தொழிலுடையவர்கள். அத்தொழிலில் அவர்களுடைய வல்லமை மிகவும் ஆச்சரியப்படத்தக்கதென்றும், கத்தியாகிய ஒரே ஆயுதத்தைக்கொண்டே மான்முதல் யானைவரையிலுள்ள வனவிலங்குகள் யாவற்றையும் வெட்டி வேட்டையாடிக் கொல்வார்களென்றும் இவர்களுக்குப் பேருண்டாயிருந்தது. சிங்கம் காண்டாமிருகம் போன்றவைகளும் இந்தப் பெருமைதங்கிய வேட்டைக்காரர்களுடைய கத்திகளுக்கு எதிர்நிற்கமாட்டாமல் மடிந்து போவது வழக்கமாயிருந்தது. நான் இளமைப்பருவம் தொடங்கி, யானைவேட்டையில் பழகித் தேறினவனாயிருந்தபோதிலும் அவர்களுக்கு வந்தனஞ்செய்து மிகுந்த வணக்கத்துடன் உங்களுக்கு நான் தாழ்ந்தவன் என்று சொல்லிக்கொள்ள விரும்பினேன்.

இந்த வீரர்களுடைய அருந்தொழில்களின் கதைகளை இதுவரையில் எனக்குச் சொல்லிக்கொண்டுவந்த விதத்தினால் கத்தி ஒன்றைக்கொண்டே யானையை எவ்விதமாய்க் கொல்லக்கூடுமென்று ஒரு சந்தேகமுண்டாயிருந்தது. பலபேர் கூட்டமாகக் கூடி யானையை வளைந்து அதைத் துண்டுதுண்டாக வெட்டிக் கொல்வ

தாக இருக்குமென்று நினைத்திருந்தேன். அப்படியல்லவென்றும், யானையைத் தாத்துமிடம் குதிரையேறிச் சவாரிசெய்வதற்கு ஏற்ற தாயிருந்தால் மேலே சொல்லிய வேட்டைக்காரர் நாலுபேர் ஒன்றுய்க்கூடி எவ்வளவு கொடுமையான யானையையும் தப்பாமற் கொன்றுவிடுவார்களென்றும் எனக்கு உறுதியாய்ச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். நான் அபிஸினியாதேசத்திலுள்ள ஆறுகளின் பிறப்பிடமுதலியவற்றைக் கண்டறிவதற்காகப் போகும் வழிகளில், இந்த யானைவேட்டைக்காரர்களையும் துணையாக அழைத்துக்கொண்டுபோனால் தேசத்தைக் கண்டறிவதுடன் வேட்டையினால்வரும் இன்பத்தையும் அடைவதற்கு விசேஷ அநுகூலமுண்டாகுமென்று நினைத்து அப்படிப் பயணப்படுவதற்குத் தகுந்த சமயம் நேரிட்டவுடன் அவர்களில் சிலரைக் கூட அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டிருந்தேன். இந்தக் கருத்தைத் தெரிந்துகொண்டவுடனே வேட்டைக்காரர்கள் என்னை வந்து கண்டார்கள்.

இந்த ஹாம்ரன்ஸ் என்கிற ஜாதியாருக்கும் மற்ற அரேபியன் ஜாதியாருக்கும் ஒருவிஷயத்தில் வேற்றுமை உண்டு. இவர் தலைமயிரை மற்றவர்களினும் நீளமாக வளர்த்து அதை நடுவில் இரண்டு சிகையாகப் பிரித்துவிட்டுக்கொண்டிருப்பார்கள். மயிர் வளையம் வளையமாகத் தொங்கிக்கொண்டிருக்கும். இந்த ஒரு அம்சம்தவிர வேறே எவ்விதத்திலும் வேற்றுமை அகப்படாது. மற்ற அரேபியர்களைப்போலவே இவர்களும் கத்தியும் கேடயமும் ஆயுதமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கேடயங்கள் சக்கரவடிவாகவிருக்கும். சாதாரணமாய்க் காண்டாமிருகத்தின் தோலினால் செய்திருக்கும்.

அரேபியர்கள் விசேஷமான தேகவலிவு உடையவர்களல்ல; ஆனால் சுறுசுறுப்புடையவர்கள். ஓடவேண்டியிருந்தால் யாதொரு வருத்தமுமில்லாமல் காற்றின்மேல் போவதுபோல் ஓடுவார்கள். சாதாரணமாய் அஞ்சடி அஞ்சங்குல உயரமுடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற கத்திகளைத் தாங்கும்படியான தேகவலிமை அவர்களுக்கில்லை. ஆகையினால் கத்தியை ஓச்சி ஒருவனை வெட்டினாலும் மறுபடியும் தெப்பென்று கத்தியை வாங்கிக்கொண்டு விலகிப்போய்விடும்படியான சக்தி அவர்களுக்குக் கிடையாது. அதனால் கேடயத்தினால் தப்பித்துக்கொண்டாலல்லாமல் வேறேவிதமாய்த் தப்புவது கூடாமை. அவர்களோடு எதிர்த்துச் சண்டைபோடுகிறவன் கத்தியை உபயோகிக்கும் வித்தையில் சிறந்த வல்லமையுடையவனாயிருந்தால் அவன் பார்த்து இவர்களை உயிரோடுவிட்டால் உண்டு இல்லாவிட்டால் இல்லை.

கத்தியைப் பயிலும் வித்தையில் இந்த யானைவேட்டைக்காரருக்குச் சாமர்த்தியம் குறைவாயிருந்தாலும், குத்துவதிலும் வெட்டுவதிலும் அவர்களுக்கு ஒப்பானவர்களில்லை. அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற கத்தியின் கூர்மையான நுனி சரீரத்தில் பட்டமாத்திரத்தில் பிராணன் துடிப்பதுபோலிருக்கும். அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் கத்திகள் சாதாரண கத்திகளைப்போலிருந்தும், பிடியை இடதுகையில் பிடித்துக்கொண்டு கத்தியை வலதுகையிலும் தாங்கிக்கொள்ளுவதற்காகப் பிடியினின்று ஏழெட்டங்குல நீளம் கயிறு கட்டியிருக்கும். அன்றியும் கத்தி உறைகளுக்கு யானைத்தோலினால் மூடி செய்திருக்கும்.

ஒருநாள் நான் அவர்களோடு நீடித்த சம்பாஷணை செய்யலானேன். அப்போது அவர்கள் கத்தியினால் யானையைக் கொல்லும் விதங்களைச் செம்மையாய்ச் சொல்ல, அவர்களுடைய காரியங்களைப்பற்றி நான் முன்னாலே கேள்விப்பட்டிருந்ததெல்லாம் உண்மையென்று அறிந்துகொண்டேன். குதிரை வைத்துக்கொள்ளச் சக்தியில்லாதவர்கள் இவ்விரண்டுபேராய் வேட்டைக்குப்போவார்கள். யானைக்கால் வடிவு எங்கே தெரிகிறதோ, அதைப்பிடித்துக்கொண்டு அது போயிருக்கிறவழியே போய் நல்ல மத்தியான வேளையில் யானையிருக்குமிடம் சேருவார்கள். நடுப்பகலில் யானைகள் தூங்கி உறங்கிக்கொண்டாவதிருக்கும்; அல்லது இன்னதென்று தெரியாமல் பிரமைபிடித்தாவதிருக்கும். ஆகையால் அப்போது அவைகளைக் கிட்டுவது மிகவும் எளிது. யானை தூங்கிக்கொண்டிருந்தால், ஒருவன் முன்பக்கமாய் பூனைபோலப் பதுங்கிக்கொண்டுபோய் ஒரேவெட்டினால் துதிக்கையைச் சேதித்துப் போடுவான். வெட்டுபட்டு யானை திடுக்கிட்டு விழித்துக்கொள்ளுவதற்குமுன் வேட்டைக்காரர் தப்பி ஓடிப்போவார்கள்; துதிக்கையற்ற யானையும் ஒரு நாழிகை இரண்டு நாழிகைக்குள்ளே இறந்துபோம்.

அப்படியன்றி யானை விழித்துக்கொண்டிருந்தால், அதை நெருங்குவது கூடாது; அந்தப்பட்சத்தில், பின்புறமாய் அதற்குத் தெரியாமல்போய் பின்னங்கால் முட்டி நரம்பைப்பார்த்துக் கத்தியை ஓச்சி ஒரு வெட்டுபோடுவார்கள். இதனாலேயே அதன் சக்தி முக்காலே மூன்றுவீசமும் போய்விடும்; அப்புறம் உடனே மற்றொரு பின்னங்காலிலும் அப்படியே செய்வார்கள். இப்படிச் செய்வதனால் இரத்த நரம்புகள் அறுந்துபோமாகையால், நிமிஷத்தில் இரத்தம் ஆறுகப்பெருகி யானை இறந்துபோம். ஏழைகளாயிருப்பவர்கள் இப்படிச் செய்துவந்து தந்தம் சம்பாதித்து விற்றுப் பணஞ்சேர்ந்தபிறகு, குதிரைவாங்கி வைத்துக்கொண்டு வேட்டையாட ஆரம்பிப்பார்கள்.

குதிரைவைத்துக்கொண்டிருப்பவர்கள் நன்னான்குபேராய்க் கூட்டங்கூடி விடியற்காலத்தில் சவாரி புறப்பட்டு சாதாரணமாய் ஆற்றோரத்திலேயே அங்குமிங்கும் யானைக்காகத் தேடித்திரிவார்கள். முதனாள் ராத்திரி தண்ணீர்குடிக்க ஆற்றுக்குவந்திருந்த யானையின் காலடி கண்டுபிடித்து, எவ்வளவு தூரமானாலும் அது போயிருக்கிற வழியேபோய் யானையிருக்குமிடஞ்சேர்ந்து, முதல்முதல் பெரியபெரிய கொம்புகளினால் யானையைத் தூண்டிக் கோபமூட்டுவார்கள். உடனே அது இவர்கள்மேல் திரும்பித் துரத்த ஓடிவரும். அப்போது இவர்கள் மூலைக்கொருவனாய்ப் பறந்தோட, யானையும் சற்றுநேரம்பார்த்து ஓய்ந்துபோய் ஓரிடத்தில் நின்றுபோம். முன்போலவே அதை மறுபடியும் தூண்டுவார்கள்; அது மறுபடியும் துரத்தும். முக்கியமாய் அதிக சாமர்த்தியமுள்ள ஒருவன்மாத்திரம் அதன் முகத்திற்கு அருகாமையில் அதன் ஞாபகத்தையெல்லாம் தன்மேல் செலுத்தும்பொருட்டு அதற்கு எட்டினதும் எட்டாததுமாய் ஓடிக்கொண்டிருப்பான்; யானையும் இவனையே பார்த்துப் பின்செல்லும். யானையினால் தொடரப்பட்டு அதன் வேகத்திற்குத்தக்கபடி தானும் சாரிசெய்வதற்கு எவ்வளவு நிதானமும் சாமர்த்தியமும் வேண்டும். இப்படி அவனும் யானையும் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும்போது, அதற்குத் தெரியாமல் பின்பக்கமாய் ஓடிவரும் குதிரைவீரரில் ஒருவன் உருவினகத்தியுங் கையுமாய் குதிரையைவிட்டிறங்கி, யானையின் பின்னங்காலில் ஒரு வெட்டுபோட்டு சட்டென்று தன் குதிரை ஏறிக்கொள்ளுவான். வெட்டினால் பாதி ஒடிங்கிப்போயிருக்கிற யானை பின்திரும்புந்தருணத்தில், முன்னாலோடுகிறவன் கிட்டவந்து அதைத் தன்னைப் பின்தொடரச்செய்வான். யானையும் தட்டுத்தடுமாறிப் பின்செல்லும்போது பின்னிருப்பவரில் ஒருவன் சுலபமாய் மற்றொரு பின்னங்கால் நரம்பையும் வெட்டிப்போடுவான். இரண்டு வெட்டோடு யானை சகல பலமும் அற்றுப்போய் நின்ற இடத்திலேயே நின்று இரத்தம்பெருகி சீக்கிரத்தில் மடிந்துபோம்.

இந்தமாதிரியான யானை வேட்டையினால் உண்டாகும் அபாயம் இவ்வளவு அவ்வளவல்ல. அநேகந்தடவை இந்த வேட்டைக்காரர் அப்படிப்பட்ட அபாயத்துக்கு ஆளாகியுமிருக்கிறார்கள். மனோதிடமும் தேகவலிவும் சுறுசுறுப்புமுள்ள இவர்களுக்கு வணங்கி சலாஞ்செய்ய விரும்பினேன். ஒருதரம் ஒரு வேட்டைக்காரன் யானையைக் காலின்கண் வெட்டப்போகும்போது புல் தடுக்கிக் கத்தி அதன்மேல் படாமற்போக, பின்திரும்பின யானைக்குத் தப்பும்படி ஓடிவந்து கத்தி தன் காலிலேயே பாய்ந்து கீழே விழுந்தான்; அந்தத்தட்சணத்தில் அவன் கூட்டாளி ஒருவன் ஓடிவந்து யானையின் காலைவெட்டி அவனைக் காப்பாற்றினான். இப்படிப்பட்ட அபாயங்களுக்கு இவர்கள் கொஞ்சமும் பின்னிடுகிற

தில்லை. இவர்கள் தங்கள் பிரதாபங்களைச்சொல்ல, அவைகளைக் கேட்ட எனக்கு மூஞ்சி சிறுத்தது. சிறுபிராயமுதல் காட்டில் வேட்டையாடுந்தொழிலைக் கைக்கொண்டிருந்த நான் என்னை அதிக வியாபகனென்று எண்ணியிருந்தேன். இவர்களோடு சம்பாஷித்த பின் எனக்கு வெட்கமாய்ப் போயிற்று. பீரங்கிகள் குண்டுகள் முதலியவைகள் ஒன்றுமில்லாமல் தாங்களே நோய்ப்போய்க் காட்டுமிருகங்களைக் கொல்லுகிற இவர்களுக்கு நான் வெகு குறைந்தவனென்று தெரிந்துகொண்டேன். ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்யவேண்டுமென்ற ஐக்கியமும் கட்டுப்பாடும் இவர்களுக்குள் உண்டு. எனக்கு இவர்களிடத்தில் உண்டான அத்தியந்தப் பிரீதியினால் வெகுநேரம் வேடிக்கையாய்ப் பேசியிருந்தேன்; இவர்களோடு கலந்து கூடிக்கொண்டு வேட்டையாடவேண்டுமென்கிற ஆசையும் எனக்குண்டாயிற்று.

கைத்தொழில்கள்.

கைத்தொழில்கள் என்றால்; மனிதன் கையினால் செய்யப்படும் வேலைகளென்று அர்த்தம். இப்பதப்பொருளின்படி, கையினலாகும் எல்லா வேலைகளையும் இச்சொல் குறிக்கவேண்டுமல்லவா? ஆயினும் அப்படியின்றி ஏதோ சில வேலைகளுக்குமாத்திரந்தான் இச்சொல்லை வழங்கிவருகிறார்கள். கைத்தொழிலென்கிற வியவகாரத்துக்கு விஷயம் எவையென்றும், அவை எவ்வித தேசங்களில் வழங்கிவருமென்றும், அவைகளை அபிவிர்த்திசெய்யும் கருவிகள் எவையென்றும், அவைகளாலுண்டாகும் நன்மைகள் எப்படிப்பட்டவையென்றும் சற்று விசாரிப்போம்.

மனிதர்கள் செய்யும் வேலைகள் எல்லாவற்றிற்கும் கைவேண்டுவதுதான்; ஆயினும் தண்ணீரிறைப்பதும் சமைப்பதுமுதலிய சாதாரணவேலைகள் கைத்தொழில்கள் அல்ல. தந்திரமும் திறமையுமுள்ளவர்கள் செய்யத்தக்க சில வேலைகளே கைத்தொழில்களாம்.

தக்கபடி நிலத்தை உழுது கொழுமையாக்கி விதை நட்டுத் தகுந்த காலத்தில் களைபிடுங்கிப் பயிரிடுகிறார்களே; இப்படிப்பட்ட விவசாயத்தொழில் கைத்தொழிலா அல்லவாவென்றாலோ, அல்ல; ஏனெனில் மனிதன் பிரயாசப்படுகிறது மெய்யே; ஆகிலும் விதை முளைப்பதும் கதிர்விட்டுப் பழுத்துச் சிவப்பதும் தெய்வச்செயலேயன்றி மனுஷிய யத்தனமன்று. ஆனதுபற்றி நெல்முதலியவைகளை விளைபொருள்களெனவேண்டும். எண்ணெய் ஆடுவது

கருப்பஞ்சாறு இறக்குவதுமுதலிய வேலைகள் சிறப்பற்றவையாத லால், அவைகளுக்குக் கைத்தொழில்களென்னும் பேர் தகாது.

கையாலெழுதுகிற சித்திரவேலையைக் கைத்தொழிலென்னலாமோவெனில், அதுவுங்கூடாது. கைத்தொழில்களினும் சித்திர வேலை மேன்மையானது; அதைக் கைத்தொழிலென்றால், அதன் சிறப்புக்குக் குறைவு சொல்லுகிறபடியாகும். சித்திரத்தைக் கையினாலெழுதினபோதிலும், உண்மையாய் வேலைசெய்கிறது மனது. ஆதலால் சித்திரவேலையை மனவூகவேலையென்று சொல்லலாம். இப்படிப்பட்ட வேலைகளுக்குக் குறைந்தும் முன்சொன்ன வேலைகளுக்குச் சற்று உயர்ந்துமிருக்கிற வேலைகளைத்தான் கைத்தொழில்கள் என்கிறார்கள். கெடியாரவேலையைக் கைத்தொழிலென்று சொல்லலாம். பொன்னையோ, வெள்ளியையோ, இரும்பையோ, ஏதோ ஒரு உலோகத்தை நானாவித சக்கரங்களாகவும் சுழல்களாகவும் செய்து கெடியாரமென்கிற விசித்திரயந்திரத்தை இயற்றுகிறார்கள். சித்திரவேலைபோல இவ்வேலையிலும் யுக்திசாமர்த்தியம் வேண்டியிருக்கவில்லையா? அப்படியிருக்க, இதைச் சித்திரவேலையினுந் தாழ்ந்ததான கைத்தொழிலென்று சொல்லுவானேன் எனில், ஆம் முதல்முதல் கெடியாரம்பண்ணுகிற விதம் கண்டுபிடிக்கும்போது அதிக யுக்தியினாலேதான் ஆகவேண்டியிருந்தது; ஒருதரம் கண்டுபிடித்தபிறகு சாதாரணமாய் எவனுகிலும் அந்த வழியைக் கற்றுக்கொண்டு கெடியாரம் பண்ணிப்போடலாமல்லவா? சித்திரவேலையோ அப்படியல்ல. இதுதான் சித்திரவேலைக்கும் கெடியாரவேலைக்கும் உள்ள வித்தியாசம். இப்படியே எந்திரங்களினால் இயற்றப்பட்ட இரும்புவேலை, தச்சுவேலை, கண்ணாடிவேலை, கலசம்முதலான மண்வேலை, பஞ்சுவேலை, தோல்வேலை, கடிதவேலை, அச்சுவேலை முதலியவைகளும் கைத்தொழில்களாம்.

நாகரிகமுள்ள தேசங்களில்தான் கைத்தொழில்கள் நடந்துவரும். மிக ஐசுவரியம்மாத்திரம் பொருந்திய தேசங்களில் கைத்தொழில்கள் அதிகமாய்க் காணப்படமாட்டா; ஏனெனில், உழைப்பில்லாமலே தனவான்களாயிருந்தால்,பிறகு உழைக்க மனம்வராது. மிகவும் தரித்திரதேசங்களிலும் கைத்தொழில்கள் இருக்கமாட்டா; ஏனெனில் கொஞ்சம் கூடத் திரவியமில்லாவிட்டால், முதல்முதல் கைத்தொழில்கள் ஊன்றுகிறவிதமெப்படி? கைத்தொழில்களை நடத்தும் வழியைக் கண்டுபிடித்தற்கு சாஸ்திரப்பயிற்சியும், நுட்பவறிவும், அவைகளை இயற்றுவதற்கு யுக்தி உபாயமும், செழிப்பிப்பதற்கு ஒழுங்கும் ஒற்றுமையும் வேண்டும். அநேகம் பேர்சேர்ந்து ஒருமிக்கப் பிரவேசிக்கவேண்டும். அவைகளைப் பாதுகாப்பதற்குத் தகுந்த அரசாண்மை இருக்கவேண்டும். நாகரிகமற்ற தேசத்தில் இதெல்லாம் என்னமாய் நேரும். முதலில்

ஏற்படும்போது எந்திரங்கள் பண்ணத் திரவியம் வேண்டும். சாமான்களின்றி வேலை நடக்கமாட்டாதாகையால், பற்பல தேசங்களினின்றும் சாமான்கள் வரவழைப்பதற்கும் முன்பின் சரிப்படுத்துவதற்கும் பணம் வேண்டும். இப்படிச் செய்வதற்காகப் பிறதேசங்களோடு வர்த்தகம்பண்ணிக்கொண்டு சிநேகம்பாராட்டி வரவேண்டியது. வர்த்தகம் விசேஷமாய் நடவாததேசத்தில் கைத்தொழில்களும் நடவா. ஒரு தேசத்தில் கைத்தொழில்கள் ஊன்றித் திடப்பட்டு மேன்மைபொருந்திச் சிறந்தபேரடைய நெடுநாள் பிடிக்கும்.

கைத்தொழில்களால் மனிதருக்குண்டாகும் பலன் என்னவெனில், வேண்டியவைகளை அனுபவித்துச் சௌக்கியமாய் வாழ்வுதே. பிராணன் போகவொட்டாமல் காப்பாற்றுவதற்குச் செய்யவேண்டியது விவசாயம்; சந்தோஷமாய் இனிதுவாழ்வதற்குச் செய்யவேண்டியது கைத்தொழில். கடவுள் சகல வஸ்துக்களையும் படைத்து மனிதனுக்குக் கைகால்முதலிய உறுப்புங் கொடுத்திருக்கிறதேன்? இதைப்பற்றியல்லவோ மனிதர்கள் மற்ற ஜந்துக்களைவிட மேலானவர்களென்று சொல்லப்படுகின்றனர். புத்தியினால் மனிதர்கள் மற்ற ஜந்துக்களைவிட எப்படி சிறந்திருக்கிறார்களோ, அப்படியே கைகால்களினாலும் சிறப்புற்றிருக்கிறார்கள்.

எந்திரங்கள் இயற்றுவதற்குச் சாஸ்திரஞானம் விலையற்ற சாதகம். மனிதன் நெடுநாள் செய்துமுடிக்கும் வேலையை, எந்திரம் அதிசீக்கிரத்தில் செய்துமுடிக்கும். அன்றியும், மனிதனுடைய வலிமைக்கெட்டாத காரியங்களும் எந்திரத்தினால் நிறைவேறும். மணலும் சாம்பலும் கண்ணாடியாகிறதென்றும், கந்தை கடிதம் ஆகிறதென்றும் சொன்னால், யாருக்குத்தான் முதலில் அதிசயமாயிராது? கடிதத்தை வைத்தால், கண்மூடித் திறப்பதுமுன்னே அதை இழுத்துக்கொண்டுபோய் மைதடவி அச்சிட்டு மறுபடியும் ஓரிடத்தில் கொண்டு சேர்த்துவிட்டு, உடனே மற்றொரு கடிதத்தை அதேமாதிரியாகச் செய்ய இழுத்துக்கொண்டுபோகிறதே, அப்படிப்பட்ட புஸ்தகங்களைப் பதிப்பிக்கிற எந்திரத்தைப் பார்த்து யார்தான் வியக்காமலிருப்பார்கள்? சணலைச் சரிகையாக்கினால் ஒன்றுக்கு ஐயாயிரமடங்கு விலையுயர்ந்துபோகிறது. இரும்பை ஊசிகளாகவும் சங்கிலிகளாகவும் பண்ணினால் விலை எத்தனையோபங்கு அதிகரிக்கிறது. இதெல்லாம் கைத்தொழில்களின் சிறப்பல்லவா?

நவநாடக கதைகள்.

விக்கிரமோர்வசி.

(தொடர்ச்சி.)

அப்போது அவள் பிரிவை ஆற்றமாட்டாமல், புரூரவன் பெருமூச்சுவிட்டு "பால்பாக்கியமில்லாதானுக்கு விலைப்பாலையும் பூனை குடித்ததாம்" என்பதுபோல், தானய்வந்ததும் தக்கவில்லையே! நம்முடைய துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லலாம் என்று மனநொந்து நிற்கையில், விதூஷகன் என்னவோ சொல்ல வாயெடுத்து உடனே வாயை மூடிக்கொண்டு ஓஹ! ஊர்வசி வந்திருந்தபோது அவளையே பார்த்துக்கொண்டு இவன் கொடுத்த பட்டையை எங்கேயோ இழந்துவிட்டேனே! இப்போது இவன் கேட்டால் என்ன உத்தரம் சொல்லுகிறதென்று திகிலடைந்தான். அதுகண்டு அரசன், என்னவோ சொல்ல வாயெடுத்தையே, அதென்ன சொல் என்று விதூஷகனைக் கேட்க, அவன் சுகம்வரினும் துக்கம்வரினும் தம்மியல்பிற்கு மாறுபடாத உம்மைப்போன்ற மகானுபாவரும் மனம் வருந்துவார்களோ; நீர் எண்ணியது துரிதமேகைகூடும். மனங்கலங்கவேண்டாம்; என்று சொல்ல நினைத்தேன் என்றான். அதற்குப் புரூரவன் நீ என்னவோ பிதற்றுகிறாய்; இப்போது அவைகளைச் சொல்வதிற் பயனென்ன? அவள்எழுதியெறிந்த பட்டையைக் கொடு; அதையாவது பார்த்துக்கொண்டு கொஞ்சநேரம் போது போக்குகிறேன் என்ன: முன்னமே திகிலடைந்து நடுங்கிக்கொண்டிருந்த விதூஷகன்: ஐயோ! ஊர்வசியோடு கூடவே அதுவும் போய்விட்டதே என்றான். அதைக் கேட்கவே அரசன் சோகம் விஞ்சி விதூஷகன்மேற் கோபங்கொண்டு அதைத்தேடத் தலைப்பட்டான்.

இவர்கள் இப்படியிருக்க, அந்த ராஜாவின் பட்டத்தரசியானவள் அரசன் ஏதோ வேறெண்ணங்கொண்டிருக்கிறதாய்ச் சில குறிப்புகளாலறிந்து, அதன் உண்மையை அறியவேண்டுமென்று நிபுணிகை என்னும் தன் தாதிப்பெண்ணை அழைத்து, நம்முடைய ராஜா இன்றைக்குக் காலையிலெழுந்தது முதல் ஒருமாதிரியாயிருக்கிறார்; அந்த விஷயம் விதூஷகனுக்கானால் சீராய்த் தெரியும். அதை எப்படியாவது அவனிடத்திலிருந்து அறிந்துகொண்டுவா என்று அவனிடம் அனுப்ப, அவளும் அப்படியே போய், ராஜசிங்காசனத்துக்கருகில் சித்திரக் குரங்குபோல் அசையாமல் அரசன் சொன்னசெய்தியை எப்போது வெளியிடப்போகிறோமென்று உதடு துடிக்கத் துடிக்க, விதூஷகன் உட்காந்திருக்கக் கண்டு, நாம் இவனை எப்படி மோசஞ்செய்கிறது? ஆனால் புல்மேல் விழுந்த பனிபோல்,

இவன் வாயில் ஒன்றும் நிமிஷமாகிலும் நில்லாதே என்றெண்ணி அவனருகிற்போய் வணங்கித் தேவியார் கட்டளையை விண்ணப் பஞ்செய்தாள். அதைக் கேட்டு விதூஷகன்; நம்மாசியெண்ணி யது உண்மைதான், ராஜாவுக்குண்டாயிருக்கிற மனக்கவலையைத் தீர்த்தபின்பு நான் தேவியார் தரிசனத்துக்கு வருகிறேன், இப் போது இங்கிருந்தே அநேக நமஸ்காரஞ்செய்ததாய்ச் சொல்ல வேண்டும் என்றான். நிபுணிகையும் மெதுவாய் மோசஞ்செய்து சங்கதி தெரிந்துகொண்டோம் என்று மனங்களித்து, அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ராஜாத்தியிடம் வந்து நடந்த செய்திகளை யெல்லாம் செம்மையாய்ச் சொன்னாள். அதுமுதல் பட்டத்தரசி அடிக்கடி மஹாராஜாவின் செய்கைகளையெல்லாம் அறிந்து தனக் குத் தெரிவிக்கும்படி நிபுணிகைக்குக் கட்டளையிட, அப்படியே அவளும் பிரமதவனத்திலிருக்கிற கொடிமண்டபத்தில் ராஜா விதூ ஷகனோடு விசாரப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு, அப்போ தைக்கப்போது அங்கே நடப்பவைகளெல்லாம் ராணியாரிடம் வந்து விண்ணப்பஞ்செய்துகொண்டிருந்தாள்.

ஒருநாள் ராஜமஹிஷி தன் நாயகனுடைய நடவடிக்கையை நே ரிலே வந்து காணவேண்டுமென்று கருத்துக்கொண்டு நிபுணிகை யுடன் தமது உத்தியானவனத்திற்கு வந்தாள். அங்கே ஒரு மா த்து மறைவில் இருவரும் ஒளித்துக்கொண்டு புரூரவன் படுகிறபாட் டைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அவன் தேடிக்கொண்டிருந்த பட்டை காற்றிலடித்துக்கொண்டு ராணியின் காலண்டை வந்து விழ்ந்தது. உடனே அவள் அதை எடுத்துப் படித்துப்பார்த்தாள். வேறொருவள் ராஜாவினிடம் தன் கருத்தை எழுதியனுப்பினதா யிருந்தது. தன் கணவன் கருத்தைக் கண்ணெதிரிற்காணவே கொஞ்சஞ் சீற்றமுற்றிருந்தாள்.

அப்போது ராஜாவும் விதூஷகனும் அதை முழுதும் தேடி யும் அகப்படாமையால், விதூஷகன் இவன் எண்ணத்தை எப் படியாவது மாற்றிவிடவேண்டுமென்று, என் நண்பனே! இதோ இந்த உத்தியானவனத்திற்கருகில் நீ விளையாடுகிற மலை தெரி கிறது; அங்கே போவோமா என்றான். அது செவிடன்காதிற் சங் கூதினதுபோலாயிற்று. அரசன் இவையொன்றையும் செவிக்கொள் ளாமலே பித்தன்போல என்னவோ பேசிக்கொண்டு எழுந்திருந்து எதிரில் கிடந்ததை அப்பட்டையென்றெடுக்கப்போனான். அது வாடி ஒளிமழுங்கிய மயிற்றோகையாயிருந்தது. இவைகளையெல் லாம் பார்த்துக்கொண்டிருந்த தேவியானவள் புற்றிலிருந்து பாம்பு புறப்படுவதுபோலப் புறப்பட்டுக் கண்கள் சிவந்து உதடுதுடிக்க அவன் எதிரில் வந்து நின்று, "புலம்பினதுபோதும், இதோ ஊர் வசி எழுதியது" என்று அதை அவன் கையிற்கொடுக்கப்போனாள்.

அது கண்டு அரசன், திடுக்கிட்டுப் பரபரப்புடன் அவளண்டை வந்து நல்வரவு விசாரித்து, என் காதற்கிளியே! நானிதைத் தேடவில்லை; வீணாய் என்மேற் கோபங்கொள்ளவேண்டாம் என்று வேண்டிக்கொள்ள, அவள் மழைக்காலத்து ஆறுபோல் மனக்கலக்கந்தெளியாமலே தோழியோடு தன்னிடம்போய்ச் சேர்ந்தாள்.

வணங்கிக் கும்பிட்டுக் கோபந்தெளியும்படி வேண்டிக்கொண்ட கணவனை அலக்ஷியஞ்செய்து அந்தப்புரம் போய்ச் சேர்ந்ததும் தேவியானவள் விசனமடைந்து "பெண்புத்தி பின்புத்தி" என்பதற்கேற்ப, அப்போது மானத்தைப் பெரிதாய்ப் பார்த்தோமேயொழிய பின்வரும் துன்பத்தைச் சிறிதுஞ் சிந்தியாமற்போனோமேயென்று மனவருத்தமுற்று, இனி எந்த முகத்தைக்கொண்டு அவரிடத்துக்குப் போகிறது; அப்படித்தான் போனாலும் அவர் கண்ணெடுத்துப்பார்ப்பாரா? மாட்டாரே. ஆனாலும் பிரியானுப்பிரஸாதம் என்னும் விரதமிருந்து பார்ப்போமென்று அதைக் கைக்கொண்டாள். அந்த நியமத்தை இராத்திரியில் சந்திரன் ரோகிணிநக்ஷத்திரத்தோடு கூடியிருக்கிறபோது நம்பிராணநாதனை உப்பரிகைமேல் வரவழைத்து அவரெதிரிலேயே முடிக்கவேண்டுமென்றெண்ணி, அவரிடத்திற்குத் தன் வாசற்காவலாளனைத் தூதனுப்பினாள். அத்தருணத்தில் அந்தச் சக்கரவர்த்தி மாலைவேளையில் செய்யவேண்டிய வைதிகச்சடங்குகளை முடித்துத் தோழனோடு கூட, "எப்படியோ பாரமாயிருந்து பகற்பொழுதெல்லாம் தொலைத்தேன்; ஐயோ! அஸ்தமித்துவிட்டதே, இராப்போது மலையாவளருமே, இந்தப் போது எப்படி நீங்கப்போகிறது" என்று மனங்கலங்கிவருகையில், இந்தத் தூதன் அவனண்டைபோய், மஹாப்பிரபுவே! இராணியவர்கள் இன்றைக்கு இராத்திரி கொஞ்ச நேரம் உப்பரிகைமேல் தாங்கள் விஜயம்பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறார்களென்று விண்ணப்பஞ்செய்ய: அரசன், அவள் கருத்துக்குக் குறுக்குச்சொல்வாரெவர், அப்படியேயாகட்டும் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு, தோழனோடு விநோதமாய்ப் பேசிக்கொண்டே உப்பரிகைபோய்ச் சேர்ந்தான். உடனே சந்திரோதயமாகி எங்கும் இருள்நீங்கிப் பிரகாசிக்கப் புரூரவனும் விரஹதாபங் கொஞ்சம் அதிகரித்து அது தணியும்படி விநோதமான வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருந்தான்.

இது இப்படியிருக்க, நாட்டியமாடும்பொருட்டுத் தேவலோகத்திற்குப் போன ஊர்வசி வேறெண்ணமே இல்லாமல் புரூரவன் மேலேயே கவனமாய் ஸரஸ்வதிதேவி இயற்றிய இலக்ஷ்மீஸ்வயம்வரம் என்னும் நாடகத்தில் இலக்ஷ்மிவேஷம் பூண்டு யாவரும் இவள் இலக்ஷ்மிதானோ என்னும்படி அவ்வளவழகாய் அபிநயித்துக்கொண்டிருக்கையில், வாருணியென்பவளாய் அபிநயஞ்செய்துவந்த மேனகையானவள் ஊர்வசியை அழைத்து, குழந்தாய்! இவ்வி

டத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு முதலிய தேவதைகளனைவரும் வந்து நிறைந்திருக்கிறார்கள்; இவர்களெல்லாரும் மூன்றுலோகங்களையும் இஷ்டப்படிசெய்ய வல்லமையுடையவர்கள்; உனக்கு இஷ்டமானவனைப் பர்த்தாவாக வரித்துக்கொள்ளலாமென்ன: ஊர்வசி, புருஷோத்தமனான விஷ்ணுவை வரிக்கவேண்டியிருக்க அப்படிச் செய்யாமல் புரூரவசக்கரவர்த்தியை வரிப்பதாய்ச் சொன்னாள். அதைக்கேட்டு அவர்களுக்குக் குருவான பரதமுனிவர், நீ எவனையோ மனதில் நினைத்துக்கொண்டு நான் கற்பித்த வித்தையைக் கெடுத்துவிட்டதனால், இனி ஒருநாளும் உனக்குத் தேவலோகத்தில் உணவும் வாசமும் கிடைக்காமற்போகக்கடவன என்று சபித்தார். அச்சாபச்சொல்லைக்கேட்டு வெட்கித் தலைவணங்கிநின்ற ஊர்வசியைப் பார்த்துத் தேவேந்திரன், அந்தப் புரூரவசக்கரவர்த்தியினால் நமக்கு நேரிடுகிற சகாயம் இவ்வளவவ்வளவன்று; ஆதலால் அவருக்குச் சந்தோஷம்பண்ணுவிக்கவேண்டுவது நமக்குக் கடமைதான்; ஆகையால் நீ உன் இஷ்டப்படி அவரிடத்துக்குப் போய் அவர் உன்னிடத்தில் ஒரு குழந்தையைப் பெற்றுக் கண்டு களிக்கிறவரையில் அவர் மனங்கோணாமல் பொருத்தமாய் வாழ்ந்துகொண்டிருந்து பின்பு நம்மண்டை வந்து சேரக்கடவாய் என்று அனுக்கிரகித்தான். அதன்பின்பு ஊர்வசி, இம்முனிவர் நமக்குக் கெடுதிசெய்ய நினைத்தார்; அதுவே நன்மையாய் முடிந்தது என்று சந்தோஷித்து, உடனே தோழியுடன் புறப்பட்டுப் பிரதிஷ்டா நகரம் வந்து சேர்ந்து, அரசன் இருக்கும் இடத்தைத் தமது யோக திருஷ்டியால் கண்டறிந்து அவ்வுப்பரிகைக்குவந்து அங்கே ஓரிடத்தில் மறைந்துநின்றாள். அங்கே சக்கரவர்த்தி தன்னிடத்திலேயே குறைகூறி வருந்துவதைக்கண்டு ஊர்வசி அவனெதிரே போக இருந்தாள். அத்தருணத்தில் ராஜபத்தினி தன் நியமத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசனிடம்வந்தாள். அதுகண்டு ஊர்வசியும் சித்திரலேகையும் இதென்னவென்று திகிலடைந்து நின்றார்கள். புரூரவனும், ஓ! தேவிவந்து சேர்ந்தாளே, இனி வாயைத்திறக்க வழியில்லை என்று ஒன்றும்பேசாமல் வாயை மூடிக்கொண்டு தேவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ராணியானவள் தன் தாதிப்பெண்களோடு விரதத்திற்கு வேண்டியவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அரசனிடத்திற்குவந்து அவனை வணங்கி, என் பிராணநாதனே! இந்த விரதம் தங்கள் முன்னிலையிலேதான் நிறைவேறவேண்டியிருக்கிறது; ஆதலால் எனக்காகக் கொஞ்சம் வருத்தப்படவேண்டுமென்று வணக்கமாய்க் கேட்க அவன், உனக்காக நான் படுகிறதும் வருத்தமோ; அது எனக்குக் கிடைக்கவேண்டுமே; இதிருக்கட்டும், இந்த விரதத்தின் பேரென்ன என்று வினவ: தான் அதைச் சொல்லவெட்கித் தன் தோழியான நியுணிகையைத் திரும்பிப்பார்த்தாள். அவள்:

மஹாப்பிரபுவே, இதற்குப் பிரியானுப்பிரசாதம் என்று பெயர் என்றாள். அது கேட்டு, அரசன் என்னழகியே! ஏன் வீணாய் விரதமிருந்து தாமரை இதழ்போன்ற உடலை உலர்த்துகிறாய்? நீ யாருடைய தயையை வேண்டுகிறாயோ அவன் நீ கண்ணெடுத்துப் பார்த்தாற் போதுமென்று உன்னடிமையாய்க் கிடக்கிறானே என்றான். அவன் அப்படிச் சொல்லவே, ராஜமஹிஷி புன்னகைப்புடன் மனமகிழ்ந்து இவையெல்லாம் தன்னுடைய விரதத்தின் மகிமைதானென்று நினைத்துத் தான்வந்த காரியத்தைச் சரியாய் நடத்திவிட்டு, மகாராஜாவைப்பார்த்து: வேறேதோ ஒரு ஸ்திரியினிடத்து ஆசைகொண்டிருப்பதை நான் வேண்டாமென்று தடுக்கவில்லை; பக்ஷபாதமில்லாமல் என்னிடத்திலும் அவ்வளவு நோக்கமுள்ளவராயிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் என்றாள். அதைக்கேட்டு அந்த மகாராஜன் அப்படியொன்றும் நீ எண்ணவேண்டுவதில்லை. நீ என்னை ஒருவர்க்குத் தானமாய்க் கொடுத்துவிட்டாலும் விடலாம்; உன்னைத்தவிர மற்றொருத்தி என்னை மனதினாலும் நினைக்கக்கூடாதென்று சொல்லவே அரசி ஸந்தோஷமடைந்து அதெப்படியானாலுஞ்சரிதான்; நான் நினைத்தபடி என் நியமத்தை முடித்து விட்டேன் என்றுசொல்லி, நாயகனிடத்தில் நியமனம்பெற்றுக்கொண்டு தாதிமார்களுடன் அந்தப்புரம்போய்ச் சேர்ந்தாள்.

இவ்வளவுநேரம் இவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு ஊர்வசி பொறுமையால் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டிருந்தாள். விரதம் முடிக்கவந்தவர்கள் அனைவரும் உப்பரிகைவிட்டிறங்கிப் போனபின்பு புரூரவசக்கரவர்த்தி அந்தத் தேவகன்னிகையை நினைத்துக்கொண்டு இப்போது அந்தப் பெண்மணி என்னெதிரில்கூட வரவேண்டாம்; என் கண்ணுக்குத் தெரியாமல் அவள் காற்சிலம்போசையாவது என் செவியுற நடப்பளா, என் பின்னே வந்து தனது செந்தாமரைக் கைகளால் என் கண்களை மூடுவளா, இல்லாவிட்டால் என்கிட்டவரப் பயந்துநிற்பதைக் கண்டு, அவள் தோழியாயினும் அவளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டுவருவளா என்று சொல்லித் துயரப்படுவதைக் கண்டு, ஊர்வசி மனமகிழ்ந்து இதுதான் நாம் போகவேண்டிய தருணம் என்று, அவன் பாராமலே பின்புறமாய்ப் போய் அவன் கண்களை மூடினாள். அவன், கையால்தொட்டமாத்திரத்தில் தன்னுடம்பு குளிர்ந்துபோகவே, ஊர்வசிதானென்று தெரிந்து மிக்க சந்தோஷமடைந்தான். உடனே சித்திரலேகையும் அவனெதிரில் வந்து கைகூப்பிக் கும்பிட்டு, ஓ மகாராஜனே! இதுவரையில் இப்பேதை வாராமலிருந்ததைப் பொறுக்கவேண்டும். இவளும் உம்மைப் பிரிந்திருக்கமாட்டாமல் மிகவும் வருந்துகிறாள். இதோ உமது அடைக்கலமாய்க் கொண்டுசேர்த்தேன். இந்தக் கோடைகாலத்

தில் தினந்தோறும் சூரியனைப் பூசிக்கவேண்டுமாதலால் நான் செலவுபெற்றுக்கொள்ளுகிறேன். உமது அடியாளைமாத்திரம் எங்களைவிட்டுப் பிரிந்ததைச் சிறிதும் சிந்தியாமலிருக்கும்படி அவ்வளவு அன்பாய் ஆதரிக்கவேண்டும் என்று சொல்லி ஊர்வசியை அங்கேயே விட்டுவிட்டு அவர்கள் இருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தன் தோழியைப் பிரிந்துபோவதைக்குறித்து துக்கித்துக்கொண்டே மெல்லமெல்லத் தன்னிடம்போய்ச் சேர்ந்தாள். புரூரவனும் அவ்வழகியோடு கூடிக் களிப்புற்று இனிப்பாய் வாழ்ந்திருந்தான்.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

லக்ஷ்மணபுரி.—லக்ஷ்மணபுரியின் பிரதானவீதிகளில் நிலக்கரி ஆவி விளக்குகள் ஏற்றப்போகிறார்கள். சென்னையில் பெரும்பாலும் ஏற்றப்பட்ட தீபம் இருட்டு உண்டென்று காட்டுகிறதேயல்லாமல், வழிப்போக்கருக்கு வழிகாட்டுகிறதில்லை.

ஐரோப்பியர் ஈஸ்டின்டியர்.—சென்ற மாசம் கவர்னர் ஜெனரலவர்கள் கல்கத்தாவிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மார்ட்டினேயர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வெகுமதிகள் கொடுத்தபொழுது, ஐரோப்பிய-யூராசிய பிள்ளைகளுக்கு உதவியாய்க் கல்வி—கைத்தொழில்முதலியவைகளைக் கற்றுக்கொடுக்கும்படி துரைத்தனத்தார் முதலானவர்கள் விசேஷ முயற்சி செய்வது அவசியமென்று சொன்னார்கள். விஜயநகர மஹாராஜா கவர்னர் ஜெனரல் கொண்ட அபிப்பிராயத்திற்கு இசைய இந்தக் காரியத்திற்குத் துணைநின்று உதவிசெய்யப்பார்க்கிறார்போலாயிற்று. ட்யூக் ஆர்கயில் அங்கிலோ இந்திய மந்திரியாயிருந்தபொழுது, அவர் இந்திய சுதேசிகளுக்கன்றி, ஐரோப்பியர் ஈஸ்டின்டியர்களுக்கும் இந்தியாவில் உத்தியோகம் கொடுக்கக்கூடாதென்கிறதுபோலக் கட்டளையிட்டார். அதைப்பற்றி ஐரோப்பியர் ஈஸ்டின்டியர்களுக்குள்ளே அதிக சிந்தனையும் கலக்கமும் உண்டாயின. அந்தக் கருத்திற்கு மாறாகக் கவர்னர் ஜெனரல் பேசினதுமல்லாமல், காரியமும்படுத்துவார். துரைத்தனத்தார் நிலைநிற்க அபேக்ஷித்திருந்தால், பிரஜைகளைப்பற்றி, இவன் சுபக்ஷன், அவன் விபக்ஷன் என்று சொல்லாமல், நாடு ஐக்கியமாயிருக்கிறதுபோல, அதில் இருக்கும், பிரஜைகளும் ஐக்கியமுள்ளவர்களாகும்படியாக ஒருமைப்பாட்டை அபிவிர்த்திசெய்யவேண்டும். ஆர்கயில் பிரபு கொண்ட கருத்தின்படி, ஒருவன் தோல் நிறம் விசேஷமென்று நினைக்கவேண்டும். அப்படியா? பசுவின் நிறத்தைப் பார்க்கிறதோ, பாலைப்பார்க்கிறதோ? வெப்பம் குளிர்ச்சி இவைகளினால் உண்டாகும் விதம்விதமான நிறங்களைப் பார்க்கவேண்டுமோ, எவர்களுக்குள்ளும் கடவுளானவர் விசேஷிக்கும் நற்குண நற்செய்கைகளைப் பார்க்கவேண்டுமோ?

பரோதா மஹாராஜாவாகிய கைக்குவார் சங்கதி.—இப்போது இத்தேசத்தில் பிரசித்தமாயிருக்கிற சமாசாரம் பரோதா மஹாராஜாவுக்கு உரியது. வர்த்தமானபத்திரிகைகளில் அச்சடிக்கப்பட்டதெல்லாம் விவரமாயிருக்கிறபடியினாலே, அதைத்தொட்டு விசேஷகுறிப்புச் சொல்லவேண்டியதில்லை. ரெஸிடெண்ட் துரையை நஞ்சிட்டுக் கொலைசெய்யும்படி கைக்குவார் வகைதேடினானென்பதற்குப் பலர் இட்டசாக்ஷி போதுமானதெனக் காணப்படுகின்றது. அப்படியிருந்தும், பக்ஷபாதமில்லாமல் நடுத்தெரிந்து நோக்குமுன்னதாக வாக்குமூலம் உள்ளதென்று சொல்வதரிது. தானியவகைகளைத் தூற்றி அரிகிறதுபோல, வாக்குமூலங்களையெல்லாம் சாவதானத்தோடு சோதிக்கவேண்டும். பெல்லி துரை கைக்குவாரைக் காவலில் வைக்கப்போனபொழுது, கைக்குவார் அதிக சிந்தையோடு பாரிக்கப்பட்ட குற்றத்தில் தனக்குப் பங்கில்லையென்றும், தனக்குத் திரளான சத்துருக்கள் உண்டென்றும் வற்புறுத்தினான். அது மெய்தான்; அவன் ஆளுகையின் விஷயங்கள் அக்கிரமமும் அதிக்கிரமமுமாக நடப்பிக்கப்பட்டமையால், பிரஜைகளிற் பெரியோர் சிறியோர் அநேகர் அவன்மேற் குறைசொல்வதற்குக் காரியங்கள் உண்டாயிருந்தன. ஆனதுகொண்டு, சிலர் அவனுக்கு விரோதமாய்ச் சதியோசனை பண்ணவுங்கூடும். வருகிறமாசம் பகிரங்கமாய் நியாயவிசாரணை நடக்கும்பொழுது மெய்யும்பொய்யும் தெரிந்துபோமென்று நினைக்கலாம். ரெஸிடெண்ட் துரையைக் கொலைசெய்வதற்கு அவன் பங்கடையவில்லையென்று காணப்பட்டாலும், மீண்டும் அத்தேசத்தை ஆளும்படி இந்திய துரைத்தனத்தார் உத்தரவுசெய்யமாட்டார்கள். அந்த ராச்சியத்தின் காரியாகாரியமெல்லாம் தாறுமாறும் அக்கிரமமுமான ஸ்திதியில் இருக்கிறபடியால், அவன் ராச்சியபாரத்தை நிர்வகிக்கத்தக்கவனல்லவென்பதற்கு மிகுதியான திர்ஷ்டாந்தம் உண்டு. ஆனபடியால், தேசம் எல்லாவற்றிற்கும் மேலாய் ஆண்டுவருகிற அங்கிலேயர் பிரஜைகளைப் பரிபாலனம்பண்ணத் தக்கதாக வழிவகை ஏற்படுத்துவது அவசியம். தற்காலத்தில் ஆண்டுவருகிற நார்த்புருக் பிரபு தீதடையாய்ச்செல்வனும், நடுத்தெரிந்துநோக்கும் நாதனும், மொழிதிறம்பாச் சூரனுமாயிருக்கிறபடியினாலே, கைக்குவாரின் காரியத்தை யதார்த்தமாய் நடப்பிப்பார் என்று தினவர்த்தமானி சொல்லுகின்றது.

கைக்குவாரை விசாரணை செய்ய சில ஐரோப்பிய நியாயாதிபதிகளையும் சுதேச பிரபுக்களையும் பஞ்சாயத்தாராக கவர்னர் ஜெனரலவர்கள் நியமித்திருக்கிறார்கள். கைக்குவார்பக்ஷத்தில் வாதிக்க இங்கிலாந்திலிருந்து லாயர் பாலண்டைன் துரை என்னும் நீதிசாஸ்திரநிபுணரும் புறப்பட்டுவருகிறாராம். விசாரணை உடனே தொடங்கப்படும்.

கஞ்சம்ஜில்லாவில் உண்டான பூகம்பம்.—நாளது மீ 15உ காலமே எட்டேமுக்கால் மணிக்கு அஸ்கா என்னும் ஊரில் பூகம்பம் உண்டாயிற்று. அது வடமேற்கிலிருந்து தென்கிழக்குமுகமாய் உண்டாயிற்று.